Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

# இரத்தினச் சுருக்க இராமாயணம்

ACC. NO.
46354

மிழ் வேத நாவலர்"

"வைத்தியமணி"

சற்குரு. சித.வே. ஷண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை

தேவகோட்டை

Koviloor Digital Library

மணிவிழா தம்பதியர்
திரு. சித. ஏகப்பன் – திருமதி முத்துலெட்சுமி
59–ஆண்டு நிறைவு விழா சிருங்கேரி சாரதா பீடம், டொரான்டோ, கனடா.

Koviloor Digital Library 5/1

உ
சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

# இரத்தினச் சுருக்க இராமாயணம்

## திரு. சித. ஏகப்பன்
## திருமதி. முத்து லெட்சுமி

## அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா மலர்

வெளியீடு
**01.07.2015**

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 46354

இந்நூலாசிரியர்
"வைத்தியமணி" – "தமிழ் வேத நூலோர்"
சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை
முத்தமிழ் வேதத் திருச்சபை, தேவகோட்டை.

வெளியீடு
**முத்தமிழ் வேதத் திருச்சபை**
முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளி
வ.பெரி.மு. தெரு, தேவகோட்டை – 630 302.

Koviloor Digital Library



சிவமயம்

அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

எம் ஞானத் தெளிவுகுரு திருவடி உச்சிமேற்கொண்டு இந்நூல் மறுபதிப்பு செய்ய காரணம் கூறுதும்.

ஞானத் தெளிவு குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை அவர்களின் அன்பிற்குரிய சிவனடியார் சிதம்பரம் செட்டியார் அவர்களின் தவப்புதல்வன் சிரஞ்சீவி ஏகப்பன் அவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மறுபதிப்பு செய்கின்றோம்.

எம் ஞானத்தெளிவு குருவின் கருணைக்கு முழுதும் பாத்தியப்பட்ட கலியின் கொடுமைதீர முழுபங்கையும் ஒப்படைப்பு செய்து தாம் செய்த அனைத்து நூல்களையும் உலக மக்கள் உய்யும் வகையில் வெளிக்கொணர அந்த வாய்ப்பை சிரஞ்சீவி சித. ஏகப்பன் அவர்களுக்கு கொடுத்து சிரஞ்சீவியாக்கி அறுபதாவது ஆண்டு நிறைவில் மறுபதிப்பும் செய்ய திருவுள்ளம் களித்திருக்கிறது.

இரத்தினசுருக்க இராமாயணத்தில் சிவரகசியம் அடங்கியுள்ளது என்பதை உரைநடையாகவும் செய்யுள் வடிவாகவும் வாசித்து வாசித்து உணரும் தருணம் உடல் உயிரது கூடி இயங்கும் இயக்கம் எது என்பது தெரிய வரும் அப்பொழுது ராமன் உடலில் யார் இலக்குவணன், பரதன், சத்ருகணன், வாலி, சுக்ரீவன், அநுமன், இராவணன் மற்றும் இராமாயண கதாபாத்திரத்திரங்கள் எல்லாம் உடல் உயிரது கூடி இயங்கும் இயக்கத்தில் உரைக்க கூடிய ஒன்று.

கலியுகத்தில் மனிதனுக்கு மனிதன் தொடர்பு கொள்ள விஞ்ஞான வளர்ச்சி மிகவும் ஆச்சரியப்படக் கூடியதாக இருந்து மயக்கத்தை தருகிறது.

அந்த மயக்கத்தில் இருந்து தெளிய இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள சூட்சமத்தை நூறு பாடலில் இரத்தினசுருக்க இராமாயணத்தில் ஞானத் தெளிவுகுரு ஆக்கி தந்து கலியின் கொடுமை தீர்ந்து அற்புத வாழ்வு பெற்று ஓங்க வழிகாட்டுகிறார்கள்.

இந்த சமயத்தில் மக்களுக்கு இந்நூல் கிடைக்க தாம் பிறந்த நாளில் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்". என்ற ஆகமச் செம்மல் மூல முதல் குரு திருமூலர் நூலின்படி சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்து வரும் சிரஞ்சீவி சித. ஏகப்பன் ஐயா அவர்கள் பரம்பரையே ஞானத் தெளிவு குருவின் அருளாலும் உமையொரு பாகன் திருஅருளாலும் மலைபோல வளர்ந்து சைவ நெறியைப் பரப்பி இகபர சுகம் பெற்று வாழ்வார்கள் என்பது வெள்ளிடை.

இவண்

அடியார்க்கு அடியேன்

**இராம. ஆதிரெத்தினம்**

இணைச் செயலாளர், முத்தமிழ் வேதத் திருச்சபை, தேவகோட்டை.

Koviloor Digital Library

5/1

இந்நூலாசிரியர்

"வைத்தியமணி"

"தமிழ் வேத நாவலர்"

முத்தமிழ் வேதத் திருச்சபை

சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

தேவகோட்டை.

Koviloor Digital Library



சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

## முன்னுரை

எம் ஞானத் தெளிவு குருவின் திருவடி என்உச்சி மேற்கொண்டு இரத்தினச் சுருக்க இராமாணத்திற்கு முன்னுரை எழுதுவோமாக.

கலியுகத்தில் கலியுக வரதன் கந்தன் திருவருளால் சேடக் கலியதன் திங்கறவும், இறைவனின் திருஅருளால் குரு உள்ளிருந்து உணர்த்த உணர்ந்ததை எழுத சித்தமாயிருக்கிறோம்.

காலங்கள் கலங்கி திகைத்து கொண்டிருந்த பொழுது கருணையே வடிவமான உமை அம்பாளுக்கு இறைவன் ஆரியமும் தமிழும் உடனே சொல்லி உலகத்தை உய்ய வைத்தார். இதை திருமூலர் ஆகமச் சிறப்பின் கண் நமக்கு தெளிவாக்குகிறார்.

" மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
வாரிய முத்தமிழும்முட னேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய்தானே

அவிழ்க்கின்ற வாறு மதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறுந்
தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ் விரண்டு
முணர்த்து மவனை யுணரலு மாமே "

இறைவன் நமக்கு அருளிய இந்த இருமொழிகளும் ஆண்மொழி தமிழ் என்றும் பெண்மொழி வடமொழி என்றும் ஆதார பூர்வமாக எம் ஞானத் தெளிவுகுரு எழுதிய அகத்தியம் இயம்பும்.

இன்றைய காலகட்டத்தில் இகத்தின் எச்சம் ஆகிய இதிகாசத்தில் ஒரு பெரிய நூல் இராமாயணம். கணினியில் வெகுவிரைவாக கணக்கிடும் காலத்தில் நம் இராமாயணத்தை ஞானசாதனத்திற்கு ஏற்ப ஞானபாகை, அர்த்தபாகை, கர்மபாகை என்ற மூன்று பிரிவின் கீழ் ஞான பாகையாக இராமாயண இலக்கியம் எழுதி நிறைவு பெற்று உள்ளது. அர்த்த பாகை, திருஞானசம்பந்தர் இயற்றிய தேவாரத்தின் கண் எழுதா-கிளவியாகிய திருமுறைப் பெருநூல் விளக்கத்தில் எழுதி நிறைவு பெற்று உள்ளது.

சிவரகசியம் இயைந்த கர்மபாகை இரத்தினச் சுருக்க இராமாயணம் இதுவே. இராமாயணத்தில் சிவரகசியம்

Koviloor Digital Library



இருக்கின்றது என்று வெள்ளிடையாக நூறுபாக்களால் எழுதி நிறைவு பெற்றது. இந்நூலில் பாயிரத்தில்

" மராவென் றுரைத்துச் சிவஞான வாழ்வுற்ற மாமுனிய
மராவென் றுரைத்து வாள் நாள் பெற்ற ராவணன்
மாக்கதையை
மரா நின்ற சொல்லன்றில் கொல்வே டணைவை வசையதில
மரா நின்ற கண்டுரை செய்யரா மாயண மாகியதே."

என்று தெளிவாக நமக்கு எடுத்து இயம்புகிறார். இரத்தினச் சுருக்கம் என்றாலே மிகத் தெளிவாக சிந்தைக்கு விருந்தாக இருந்து சித்தம்போக்கு சிவம் போக்கு என்ற அமிர்தத்தை அருந்த செய்யும் அற்புத, (அரா + உமா) அயனம் ஆகும்.

நூறு பாக்களைக் கொண்ட இரத்தினச் சுருக்க இராமாயணத்தை ஓதினால் நன்மைகள் எல்லாம் நமக்கு வரும். மேலும் முப்பத்தி ஒன்றாவது பாடலை மனனம் செய்து மாருதியின் முன் ஓதினால் முன்பகை தீர்ந்து மங்களம் உண்டாகும்.

அற்புத இராமாயணம் பத்து பாடல்களை மனனம் செய்து இராமன், சீதை, லெட்சுமணன், அனுமான் நால்வரிடமும் ஓதினால் அற்புத வாழ்வு பெறுவது நிச்சயம்.

மேலும் இராகு பகவானுக்கு உரிய இராமேஸ்வரத்திற்குச் சென்று இரத்தினச் சுருக்க இராமாயணம் ஓதினால் கோடிமா தவங்கள் செய்து குன்றினர் தம்மையெல்லாம் உடனே நன்னெறிக்கு அன்றே கூட்டுவிக்கும்.

இறைவன் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஞானிகளை மக்களுக்காக பூமிக்கு அவதாரமாக அனுப்பி அவர்கள் மூலம் நமக்கு வாழ்க்கை வாழ்வது பற்றி எடுத்து காட்டுவார்கள். அதை என்றும் அழியாமல் இருக்க நூல் வடிவில் பெரியவர்கள் நமக்கு செய்து அருளியது தான் நாம் பெற்ற செல்வம்.

நாம் பெற்ற செல்வத்தை நாம் பயன்படுத்தி நம் வாழ்வில் நெறியான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டால் இருவினை ஒத்த சமயத்தில் இறைவனே மாணிக்கவாசகப் பெருமானுக்கு குருவாக வந்தமை நமக்கு எளிதில் நூல் மூலம் தான் விளங்குகின்றது.

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

ஆகவே உற்ற உறுதுணையான நண்பன், என்றும் நமக்கு சிறந்த நூல்கள் தான், அந்த வரிசையில் இரத்தினச் சுருக்க இராமாயணம் நமக்கு இகபோகத்தை தந்து அகமகிழ வைக்கும். ஏனெனில் இந்நூலை செய்தவர் கலியுகத்திற்கு இறைவனால் அனுப்பப்பட்ட மிகச் சிறந்த தெளிந்த ஞானி ஆவார். அவர்தம் வாழ்வில் சிறுவயது முதல் இயம நியம நெறிவழியே சென்று நேர்மையில் ஒன்றி தறியிருந்தாற் போல் தம்மை இருத்தி குறி அறிந்து கூடி கறிப்பறியா மிகுங் கல்வி கற்று (உடல் உயிரது கூடி கற்கும் கல்வி) அகத்தின் ஒலியை ஒருமுறைப் படுத்தி அகத்தியமான அகத்தியம் ஓர்ந்து தெளிந்து அதன் மூலம் ஆக்கிய நூல். ஞானத் தெளிவு குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை அவர்கள் ஆக்கி தந்த நூல்கள் அனைத்தும் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஆகும்.

அவர்தம் நூல்களை வாசிக்க வாசிக்க இன்பம் பெருகும். அறம்பொருள் இன்பம் வீடு அடைய எளிதில் நமக்கு வழி வக்கும். வாழ்வில் அமைதி நிலவும். மோனநிலை அடைய நமக்கு அவர்தம் நூல் துணை புரியும். இவ்வளவு அற்புதங்களைக் கொண்ட இந்நூலை சிதம்பரம் செட்டியார் அவர்கள் மகனும் தேவகோட்டை கரு. முத்தையா செட்டியார் மருமகனும் ஆகிய திரு. சித. ஏகப்பன் அவர்கள் குடும்பத்தாருக்கு குருஅருள் திருவருள் புரிந்துள்ளதை எண்ணி எண்ணி அகம்மகிழ்கின்றோம். என்றும் நிலைத்து நிற்கின்ற தமிழ் எழுத்துக்களை எங்கள் விருப்பத்திற்கேற்ப மிகவும் கனிவுடன் பொறுமையாக கணினி மூலம் நூல் வடிவமைத்துத் தந்த ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ் புஷ்ப. சுவாமிநாதன் குடும்பத்தாருக்கும் எங்கள் சபையின் நன்றி கலந்த வணக்கம் உரித்தாகட்டும்.

மேலும் இந்நூலின் முன்னுரையை கார் திகைக்க கூடிய கார்த்திகை நன்னாளில் நிறைவு செய்ய குருவருளும் திருஅருளும் கூட்டுவித்ததை எண்ணி வரும் பிறவி தோறும் முத்தமிழ் வேதத் திருச்சபையின் அடிமையாக வாழ அருள்புரிய வேண்டும் என வேண்டி நிறைவு செய்கிறோம்.

இவண்

**இராம. ஆதிரெத்தினம்**
முத்தமிழ் வேதத் திருச்சபை
இணைச் செயலாளர்

சுபானு ஆண்டு
(2003)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

# இரத்தினச் சுருக்க இராமாயணம் (ஶ்ரீ)

## கணபதி வணக்கம்

### கட்டளைக் கலித்துறை

தராதலம் வாழநல் லான்மலிலிங்க தனையிலங்கைக்
கிராவணன் கொண்டுசெல் லாது காப்புச் செய்தினிதருளி
இராமா யணந்தோற் றுவித்தயே ரம்பா வெனக்கருள்வாய்
அராவுமா யென்னுமோங் காரமூலத்தினதிபதியே. (௧)

### முருகவேள் வணக்கம்

மரகத வண்ண இராமர்க்கு வில்லம்பு மந்திரமும்
வரங்களுந் தந்தாங் கரக்கரை வென்றிட வாய்மையருள்
அரனை நிகராய கும்பமுனிவ னருட்குருவாம்
சரவண வுற்பவ ஞானசிரியவுன் றாள்சரணே. (௨)

### வாலாம்பிகை வணக்கம்

கொஞ்சும் குழவியாய் ஆடல்புரியுங் குமரியுமாய்
அஞ்சா யெனவே யணைத்தா தரவுசொல் லன்னையுமாய்
மிஞ்சு நலந்தந்து காத்தென்னை யாண்டிடு மெய்ப்பொருளாம்
அஞ்சுகப் பூங்கொடி வாலாம்பிகே யுன்னடிசரணே. (௩)

### வாழ்த்து

ஆலம ரண்ணல் சனகா தியருக் கறமருளுங்
கால முதலாய்ச் சனாதன மென்றபேர் காணவிந்த
ஞானத் தினின்ற சமையந் தழைக்க நலம் பெருகச்
சாலவுந் தெய்வ நலமோங்கவோங்கவித் தாரணியே. (௪)

### அவையடக்கம்

கலைகளெல் லாமுணர்ந் தோர்கணிறைந்தவிக் காசினியில்
சிலையிரா மன்கதைப் பேரிதி காசத்தைச் சித்துணர்வோன்
மலைப்பின்றி யோர்நூறு பாவினமைய வழங்கிடுதல்
அலைசே ருததியுண் டாழ்கூவல் நீருமுண்டப்படியே. (௫)

Koviloor Digital Library



சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

## பாயிரம்

மராவென் றுரைத்துச் சிவஞான வாழ்வுற்ற மாமுனிய
மராவென் றுரைத்துவாள் நாள்பெற்ற ராவணன் மாக்கதைய
மரா நின்ற சொல்லன்றில் கொல்வே டணைவை வசையதில
மரா நின்ற கண்டுரை செய்யரா மாயண மாகியதே. (௬)

ஆகிய நாரா யணாய நமவென் றமைந்த மொழிக்
காகிய நூலினின் ஞானமுங் கன்மு மர்த்தமுமா
யாகிய மூன்று பகுப்புள்ள பாகையுண் டாமதனி
லாகிய ஞானத்தை முன்னொரு நூலா யமைத்தனமே (௭)

அமைத்தவந் நூலினருத்தமாம் பாகை யதைமறையா
யமைத்ததி னுட்பொரு ளாமுப நீழ லறமதுவா
யமைத்திடச் சம்பந்த ராக்குதே வார மதனுரையி
லமைத்தனங் கன்மமாம் பாகை இராமாயணமிதுவே. (௮)

இராமா யணத்திற் சிவர கசிய மியைந்த திந்த
இராமா யணரத் தினச்சுருக் கத்தை இசைப்பருவக்
கிராமா அயணங் கண்டேகிடுந் தீவினையென்பதெலாம்
இராமா யணமோத நன்மை களெல்லா மியைவுறுமே. (௯)

பாயிரம் முற்றும்

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

## இரத்தினச் சுருக்க இராமாயணம் (ா)

## பூர்வ காண்டம்

### திருஅவதாரப்படலம்

திருப்பாற்கட லதிற்கண்வளர் திருமாலொரு மகவாய்
வருதற்பெறு மவதாரமு மாயிப்புவி யதனில்
ஒருமானிட ஞகிப்பழ வுணர்வானது மறையப்
பெருவாழ்வுறு நிலையெய்திய பேருண்மையை மொழிவாம்.

திருவளர வொருகுடைக் கீழகில தேசமுஞ்
செங்கோல் செலுத்தி யரசு
செய்துகோ சலநாட் டிடைச்சரயு சூழயோத்
திப்பதி யிலினி திருந்து
வருதசரத சக்ர வர்த்திமக வில்லாது
வாழ்ந்தா றுபதிஞயிரம்
மங்கையர்கள் கோசலைகை கேய்சுமித் திரைபட்ட
மகிஷியர் கள்மூ வரோடும்
இருந்தறுப தாயிரம் ஆண்டுவய தானதை
எடுத்து குலகுரு வசிட்டர்க்
கிசைந்துளம் வருந்தவது தீர்த்திட வசிட்டகுரு
எண்ணிநல் லாசி கூறி
அருந்தவர் கலைக்கோட்டு முனிவரொடு புத்திரர்க்
காமிட்டி செய்வ தற்கா
யழைக்கவவர் வரவுமழை வரவாக ரோமபா
தன்னக ரில்வைக லோர்ந்தே. (க)

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

ஓர்ந்துமுக் காலமு முணர்ந்தமுனி வரணிமிகு
முவகையொ டழைத்து வந்தாங்
குயர்வேள்வி யிருவருஞ் செயவோம வழலினின்
றொருபூதம் வந்து மூவர்
சேர்ந்துணப் பாயசம் தந்துமறை யவுமதாற்
றெசரதன் மனைவி மூவர்
திருவயிறு வாய்த்துவளர் திங்கணிறை வுறவதிற்
சேய்நால்வர் தோன்ற வன்பு
கூர்ந்துகோ சலைசேயை ராமனென்றுங் கைகை
குழவியைப் பரத னென்றும்
குணநற் சுமித்திரையி னிருகுழந் தையையிலக்
குவணசத் ருக்ண னென்றும்
தேர்ந்துதிரு நாமமிட ரவிகுலம் விளங்கவரு
திலகமென வுலக மெல்லாம்
செப்பி மகிழச் சக்ர வர்த்திதிரு மைந்தர்கள்
சிறந்துவளர் மதிய தெனவே. (உ)

வளர்மதி யெனச்சகல கலைகளு நிறைந்திட
வசிட்ட முனிபாற் பயின்று
வருமர கதச்சேயை விச்வமித் திரமுனிசெய்
மகமி னிதுநிறை வுறக்கொண்
டிளவலுடன் மூவருங் கானினடை கொண்டுசென்
றெழிலங்க தேசங் கடந்து
எரிவெஞ் சுரஞ்சேர்ந்து பலையதி பலைமந்த்ர
மிருவர்க்கு முனிவ னல்கித்
தளர்வுதீர்த் துக்கும்ப முனியா லரக்கியாஞ்
சாபமுறு தாட கைசெய்
தாளாத கொடுமையை யுரைக்கவிண் வழிகொடிய
தாடகையு முடனெ திர்ந்து
கொளவுமிவள் பெண்ணல்ல ராமகொல்லென்றவுரை
கொண்டொரு சரம் விடுத்துக்
குன்றெனச் சாய்த்துவரு சோணைநதி தாண்டிக்
குளிர்ந்தபூஞ் சோலை யுறவே (௩)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

உறவுட னிராமனு மிலக்குவணன் முனிவேள்வி
யோம்பச் சுவாகாதி யோர்கண்
டுடன்றெழ விராமனம் பால்நூற நில்லாம
லோடிமா ரீசன் பதுங்க
நிறைவுற வியாகமிது லையின்மணங் காணவந்
நீணகரி நோக்கி ராமன்
னிலக்குவ னுடன்முனி நடந்துநற் சரவணமும்
நீள்கங்கை யுங்க டக்கக்
கறைபடிந் திடுபாறை யுருவமா குனவெனக்
கவுதம ரளித்த சாபம்
காருத்த னுடையகாற் றூசிபட நீங்கியது
கன்னி யுருவாய் வணங்க
மறைமுனிய வகலியையை கௌதம ரிடஞ்சார
வைத்து மிதுலா புரிக்கே
வழிகொளவொ ருயர்நிலையின் ராமன்மா திணைநோக்க
மாது சனகியு நோக்கவே (௪)

நோக்கலிங் கிதமல வெனச்சதா னந்தனில்
லுழையிரவு போக வைக
நோன்பின னிராமனொடு சனகனவை நண்ணியே
நுன்மகம் மகணன் மணநன்
காக்கவலை தனுசுமிவர் காண்பரென வாறுபத்
தாயிரவர் தாங்கு வல்வில்
லதைக்கொணர்ந் திட்டிதை வளைப்பவர் தமக்குரிய
ளாமெனது வேள்வி தூய
தாக்கநிலம் உழுகவரு சீதையாம் பெண்ணனங்
கவளென விராம னெளிதாய்
அங்கையிலெடுத்துவளை போதிற் படீரென்
ரதிரவில் முரிந்து வீழ
நீக்கமற மண்ணுளோர் விண்ணுளோ ராசிசொல
நீர்வார்த் திராமற் களித்து
நேரிளையர் மூவர்க்கும் நேரிழையர் மூவரையு
நிறைமண மகிழ்ந்து செயவே. (௫)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

## திருவவதாரப் படலம் (வேற்றிசைப்பா)

மகிழ்ந்தசெய லோடினி திருந்துதாய் தந்தையோடு
மாறுபா டின்றி வைகி
வருமிளையர் மூவரொடு சனகமக ராசனரண்
மனையிலுப சார முடனே
முகில்வண்ண னெய்துநிலை கூறினேஞ் சுவேதவதி
முன்பிரா வணன டாது
முயலவத் தவமாது கற்பினைக் காக்கவனல்
மூழ்கியலர் மகளி னம்சம்
வகித்துமு படைச்சாலின் வருசீதை சனகனின்
மகளென வளர்ந்து பாரில்
மாலினவ தாரபுனி தம்பெறு மிராமற்கு
மாலையிட் டசுரர் கும்பைத்
தகிழ்தொழித் திடவிறைவ னருள்கூட்டி வைத்தலாற்
சமைவிளைவு மழலி னேராந்
தன்மைசேர் கற்பரசி செய்கையுங் கூறுவோம்
சகலமு மிராம செயமே. (கூ)

## இரத்தினச் சுருக்க இராமாயணம் (ா)

### பூர்வ காண்டம்

### அருள்பெறு படலம்

மொழியத்தகு மியமாதியின் முறையாந்திரு நெறியின்
வழிநிற்பவர்க் கெதிராய்க்குரு வந்தேயருள் புரிவார்
அழியாத்திரு வருண்ஞானமும் அருள்வாரெனு முண்மைக்
கெழிலார்ந்திடும் அரிராமனுக் கெய்துஞ்செயல் சான்றே.

Koviloor Digital Library



செயமங்கை யுடன்வைகி மங்கலம் பெறுவரிசைச்
சீருடன் அயோத்தி நோக்கிச்
செல்வழியி னிற்கார்த்த வீரியார்ச் சுனனைச்
செகுத்தோ னவன்ற னிழலைக்
கயந்தனிற் கண்டதி சயித்ததன் றுயினைக்
கண்டதுண் டஞ்செ யென்று
கழறிடுந் தந்தைசொல் நிறைவேற்றி யவனருள்
கைக்கொண் டெழுப்பு நிலையின்
மயங்கியே றுக்குமா றுய்ச் சேர்க்க வுயிருற்று
வருமாறி சிந்தை குளிர
மன்னவர் குலங்களைந் தவர்குருதி நிறையைந்து
மடுவிற் றருப் பணஞ்செய்
வயமீளி தகதகென வொளிருமுடல் நயனமடல்
மழுவோடு காட்சி தரவும்
மகாபரசி ராமசரணஞ்சரண மென்றபடி
வணங்கின னிராம னவனே (எ)

வணங்கிய விராமன்மேற் சுடர்வீசு கண்ணேக்கம்
வைத்துவளை தவறு தவறுய்
மாய்த்தனை பிறுகமிதை வளையென்ன வவ்வகை
வளைத்துச் சரம்பூட்டி நின்றக்
கணமவன் றவபல மெலாந்தனக் கும்வரக்
கண்டுவழி ஏகு போதிற்
கைகய புரம்பரத னைச்செல்ல வுய்த்தவர்கள்
கவுசலிய நாடு நண்ணித்
துணங்கற வியற்றிமணி மகுடமது நாளையே
சூட்டுவ திராம னுக்காம்
சுபகரம் என்றமொழி மந்தரை யுளஞ்சுடச்
சூதுகை கேயிக் குரைத்து
பிணங்கி யொருவர மிராமன்வன மியேகவென்
பிள்ளையர சாண்டு பூமி
பேணவென் றிருவரம் பெற்றுண்டிரண்டேழ்
பெருங்கா னுறச்செ யெனவே. (அ)

Koviloor Digital Library
சிவமயம்
அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

செயவென்ற வாறிரா மனைவனங் கைகயை
செலச்செய்ய லக்கு வணனும்
சீதையுமிராமனுட னேகமந் தரைகூணல்
தீரவென வில்லு ருண்டை
எயவந்த விளையாட்டி னுலிரா கவன்மீ
தினிற்கொண் டவஞ்ச மதுதீர்ந்
தெக்களிக் கக்கூனி ராசரா சனுமதா
லேங்கியுயிர் வீய வந்தத்
தயரத விராமனை மதுமற்ச மொடுகுகன்
சானவித் துறையி னண்ணித்
தான்பணிய நீயுமொரு தம்பியெனநேசித்து
தவியோட மோட்டிடப்போ
யயலெய்த மாபரத் தவமுனிவ னருவிருந்
தாற்றவுண் டேகி வெம்மை
யாம்பஞ் சுரங்கடந் தெழிற்சித் திரக்கூட
அருவரையின் வைகுபோதே. (கூ)

போதம தழிந்தா குலங்கொண்ட பரதன்
புலம்பி வருமூர்ச் சனங்கள்
பொருபடைஞ ஏறுபதாயிரமக் குரோணிபேர்
போதர நடந்து வந்து
போதமதொ ராயிரம் கொண்டகுக னேர்ந்துதவி
புரிய நதியைக் கடந்து
போய்ப்பரத் துவசரிசி வைபவ விருந்துண்டு
புறவங் கடந்தண் ணவாரப்
போதமரு மோங்கல்போய்த் தசரதன் வீந்தமை
புகலப் புலம்பி யுலகைப்
புரந்தருள வருகெனத் தந்தைசொற் படிவனம்
புகலன் றிமீளாது கண்டுன்
போதமமர் பாதுகை தருகெனக் கொண்டதைப்
பூசித்து நந்திக் கிராமம்
புகுந்தாண் டியாண்டுபதி நாலுகழி வாவதெப்
போதியெப் போது வென்றே (ம)

Koviloor Digital Library

சிவமயம்

## அருள்பெறு படலம் (வேற்றிசைப்பா)

என்றுமுயர் வாய்மையொடு பரதனுந் தமையனை
எதிர்பார்த் துநாளைக் கழிக்கும்
இயல்புவினை வாயினது கூறிஞேந் தவமாதொ
ரில்லவளு மாக முனிவன்
அன்றுதவ மீயவும் முன்பிருஷி கேசமா
தவஞ கியவ தரித்து
ஆரணிய மின்றுசேர்ந் துளதாலு மாமுனிவ
ரருள்பெற் றறஞ்சி றக்க
வென்றுதான் வந்தசெய லினிதாக மாதவ
விராமன் மேற்கொண் டகொள்கை
இயைவுமதன் விளைவுகளு ரைப்பதோ டொருபோ
திராவணன் மறலி யுலகும்
சென்றுதன் தீமையா லாமுசுமை நரகந்
திரண்டு விளைவது தவிர்க்க
தேடியே பகைகொண்ட வாறதுங் கூறுவோம்
தீதெலாம் ஒழிய வவனே. (௰௧)

## திருவருட் சாதன ஞறவுப் படலம்

அவனங்க ணுறவேவை தேகியு மிராமனவ
னனுசனுந் தெற்கு நோக்கி
யடவிசென் றத்திரி மகாரிஷி யொடுக்கமுற்
றவனின் றுதெக் கிணத்திற்
கவனமுற் றுத்தண்ட காரணிய மெய்தலுங்
கண்டவந் தகனேர் விராதன்
கைத்தலத்திற் சிக்கி மீண்டழித் திடவவன்
ககனத் துயர்ந்த வுருவாய்ப்
புவனமுத வேயெனது சாபநீங் கியதெனப்
போற்றிப் புகழ்ந்து மறையப்
போய்த்தவசி சரபங்கரிடம் நண்ண வவர்தவம்
பூர்த்தியாய் மறைய வழலிற்
றவநலம் மிகுவால கில்லியர்க ளாறுபத்
தாயிரவர் வைகுகின்ற
தண்டக வனம்புகுந் தவரபய மெனவமைவு
தந்திருந் தனர்க ளினிதே. (௰௨)

Koviloor Digital Library


சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

இனிதங்க ணுண்டுபத் தேகிடத் தெற்கின்கண்
ஏகிச் சுதக்கி னமுனி
இருக்கையுற் றுபசரம் பெற்றங்க ணின்றுதெற்
கேய்ப்பொதிகை சார்ந்த கத்ய
முனிவனை வணங்கியரு ளாசிபெற் றீசன்வில்
முனைவாளி ஏதி மந்த்ரம்
உதவிடப் பெற்றரக் கரையெலாம் மாய்த்தற்கு
முரிய திருவோ டுறற்கும்
தனியிடங் காட்டவுங் கேட்டுவட திசைமீண்டு
தந்தையென வாஞ்சை யுற்ற
சடாயுவைக் கழுகுமலையிற் கண்டு துணைகொண்டு
சகபூ ருவோற்பத் திகேட்டு
வனிதையொ டகண்டகா விரியருகி லையடியில்
வதிதற் கிலக்கு வனலும்
வகுத்தபன் னகசாலை தனிலினி திருந்தனன்
மாமுனி யுரைத்த படியே. (யஅ)

படியெலாஞ் சஞ்சரித் துத்திரி யரக்கிசூர்ப்
பன்னகி இராம னழகைப்
பருகமோ கித்தெழி லுருக்கொண்டு வந்தெதிர்
பசப்பி வசமாக்க வொன்றும்
முடியாது சனகியை போலுருக் கொண்டுகொல
முனைய முனைவனை யோச்சி
மூக்குமுலை காதறுத் துதைகொடுத் திளையவன்
போடி யடிபோ டியென்னக்
கடிதோடி முறையிடக் கண்டகர தூடணன
கம்ப நெடுமுச் சிரத்தோன்
கனன்றுபடை கொண்டெழ விராமன்மூன் றியையுமுக்
கால்நாழி கைக்குள் ளொருங்கே
மடிவிக்க ராவணேச் வரனிடந் தங்கையவள்
வந்து முறையிட் டரற்றி
மாதவர்கள் மாதவனிளெழில்சொல்லி யவன்மனதில்
மையலை எழுப்பி விடவே. (யக)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

விடனவனும் மாரீசனிடம் வந்து வலிதுதன்
விருப்பிற் கிணங்க வைத்து
மின்னுபொன் மானெனவம் மான்வசிய மோகனம்
விளைய விளையாடி நிற்க
வுடன்மிதுலை மானினியிம் மானினிது மானினிதி
தோதருக வென்று தம்பித்
தோதவிது பொய்மாயை யென்றிளவல் சொல்லுமொழி
யுதறித் தொடர்ந்தேக மான்பின்
அடவிமலை நீள்வழி கடத்தவிது வேடணைய
தற்றுச் சினந்தி ராமன்
அம்பேவ லக்வணு வென்று பேதனமாய
மாங்குர லின்மா ரணிக்க
இடறுகாட் டாகரு சணங்கடிது காவல்விட்
டேகு மெனவே பிராட்டி
இளையோர்க் குசாரணஞ் செயமாய மாரீச
இராவண னியற்றல் செயவே. (௧௫)

இராவண னியற்றுசெய லறியாது தான்தனி
இருக்கின்ற சீதை யவள்கண்
ணெதிரினி வருந்துறவு கொண்டசந் யாசிவடி
வெய்திப் புகுந்தாங் கிருந்தே
விராவுமுறை யாடலினின் மாறுபட வேடமும்
விடப்பட படத்தெழுந்து
மெல்லிய லிலைக்குடிலி னெடுநிலம் பேர்ந்தெழ
வெடுத்திர தமூர்ந்து செல்லும்
துராகிரு தனலமரப் போர்செய் சடாயுவைச்
சூதாற் செயித்து வானிற்
சுமந்திலங் காபுரியில் ராவணன் அசோகுசேர்
சூழலர ணத்தில் வைக்க
வராநின்ற தம்பியொ டிராமனை யடிவந்து
மாது குடிலோ டிலாதால்
மயங்கிப் புலம்பிவழி கொண்டு கீழ்த்திசைநோக்கி
வரவத் தடத்தின் வழியே. (௧௬)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

வழியினிலே யாய்ப்புள் ளிருக்கவே ளுருக்கு
வரவுஞ் சடாயு வவள்தன்
வயணம துரைத்திடும் போதினி லிறந்திட
வருந்தி இறுதிச் சடங்கவ்
வழியியற்றிக்கடந் தேகையி லிராமனே
யொருவு மிஃாயோனே யங்கை
யுட்கொண்ட யோமுகி செலச்சிக்கி மீளவு
முரங்கொண் டுசங்க ரித்து
எழிலவன் மகிழ்ந்திடச் சார்ந்தங் கிருந்துபின்
இரவு பகலாய் நடந்தாங்
கேகுநெறி தனில்வயிறில் வாயுள்ள கௌவந்த
ராக்கத னடற் பிடிப்பில்
அழியாத வீரவுக் கீரராக விருவரும்
அழித்தொழிக் கத்தெய்வ ரூபோ
டாகாய மதினின்று தேவியை யடையற்கு
பாயம் புகன்று செலவே. (மஎ)

செலவுகொண் டுயர்சபரி மலைநண்ண யோகத்
திருக்குஞ் சபரி மகிழ்வாய்த்
தீங்கனிகள் தந்துபசரித் தெண்ணம் நிறைவேறு
சீர்சொல்லி யோக நெறியால்
நிலவுலக நீத்துமீ ளாதகதி யெய்தவந்
நிலைநின்று பம்பை யெய்தி
நீள்வழி நடந்துநற் சபரிசொல்லிய சொல்லி
நியதி தவிரா தியற்ற
வலவுறுதி கொண்டுகவி வேந்திளவ லுறுமிரலை
மலையேற வாலி நம்மை
வதைசெய்க வென்றேவ வந்தவர்கொ லோவென்று
மனதி லெண்ணிய சுக்கிரீவன்
சலவுணர்வி ேைடுமறைய வதுகண்ட வநுமனும்
தனுசேந்து கையரிருவர்
சடைமுடியர் மரவுரிதரித் துமன முருகெழில்
ததும்ப வருவோ ரியாரே. (மஅ)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

## திருவருட் சாதன நூறவுப்படலம் (வேற்றிசைப்பா)

வருபவ ரியாரென்று நோக்கியை யுற்றுள்ள
வரலா லுரைத்தோ முனுளில்
வானவர்க ளெல்லாங் குரங்காக இந்திரன்
வாலியாய் ரவிசுக் கிரீவன்
உருவமாய்த் தீக்கடவுள் நீலனுய்ப் பிரதமனும்
உனிய வினவேந் தனுக
உருத்திரன் அநுமனுய் வந்துமலை காடெலாம்
உற்பத்தி யாகி நின்ற
தொருமையாய்த் தென்னிலங் காபுரியை யழிவிக்க
வுறுதுணை யுமாகி ராமர்க்
குதவிடத் திருநந்தி தேவரை யிராவணன்
உருத்துக் குரங்கென் றியேசிச்
சருவவரு சாபமுங் கூடலாற் கூட்டிடுந்
தன்மையு முரைப்போஞ் செயுஞ்சித்
தத்தொடும் பெறவுறுந்தவம் ஆகுமமையந்
தவிர்ப்பவர் களாரியாரே. (௰௬)

## வானராதிப நூறவுப் படலம்

சரதந்தரு மியலிற்பெறு சதமாகிய நிலைமை
வரலான்மனக் குரங்கேயல வனத்திற்றரி குரங்கும்
பரவிப்பணிந் தடிமைத்தொழில் பண்ணும்எனு முண்மை
தரநின்றுள ராமாயண சரிதம் மிதுகூறும்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 46354

Koviloor Digital Library

சிவமயம்
அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

யார்கொலிவ ரறிதுமென் றனந்தணர்தம் வடிவுகொண்
டறுகுற்று வேத நவவி
யாகரண மாதியாங் கலைகடெரி யுயர்புலமை
யதுதோன் றுமாறு கனிவாம்
வார்த்தையத னுற்றன்னை யறிவித்து மவர்கடம்
வரலாறு கேட்டி யூக
வடிவொரு வணங்கிய ரசாஞ் சுக்கிரீவனிரு
வரையப யமென்று சாரத்
சேர்விக்க வென்னுயிர்த் தோழனென ராகவன்
செப்பிச் சிநேக முறவும்
தீரவெங் குறைகேட்க வென்றனுமன் மொழிகுவன்
திரல்வா லியுஞ்சுக் கிரீவ
ஞேர்தாயி னிருபுதல்வர் வாலியொடு வலிதெதி
ருடன்ற மாயாவி யோட
வோடமுடு கப்பிலம் போயொளிய வவன்விடா
தோட்டித் தொடர்ந்து செலவே. (உ௰)

தொடர்ந்துசென் றவன்வரவை நெடுநாட்க ணோக்கியிச்
சுக்கிரீ வனுங்கிருந்தும்
சோதரன் வராமையால் ஆட்சியதை யேற்றுமுடி
சூடரெண் டேகா லியாண்டு
கடந்தவன் வந்தெதிர்த் திவன்மனைவி யையுமவன்
கைக்கொண் டடித்துத் துரத்தக்
கலங்கியெண் டிசைமலைகள் கடலேழி னோடுசக்
கரவான வரையு மோட
வடர்ந்து தொடரப்புக லிடந்தேடி யிம்மலையி
லடிவைத் தியேறி லழிகென்
றவன்சாப மேற்றுள தறிந்திந்த மலையையே
யரணு யடைந்தீண் டிருந்தான்
உடன்றெதிர்த் தவர்பலமு வரமுமரை வாசிகுறை
வுற்றுத் தனக்க துயர்வா
யோங்கவர முற்றவன் வாலியன் னேன்வலிமை
யுரைசெய் வனின்னு மெனவே. (உ௰க)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

எனவேண்டு மவ்வள மெலாம்பெறுது மென்றசுர
ரிமையோர் களிமைய வரையை
எடுத்தரவி னுற்பிணித் தலைகடலின் மத்தாக
இட்டுக் கடைந்தெ லோரும்
தனதுவலி குன்றிவிழ வவனெருவ னிருகையாற்
சலதி சுழலக் கடைந்தான்
தரணிமலை காடெலாம் அவன்வலிக் காற்ருது
தடுமாறு மட்ட கிரியுந்
தினந்தின மொரேசமைய மேகிமீண்டெய்திடுந்
திறலுடை யவன்வா லியென்று
செப்பவன் னேன்வலி யழித்துவீட் டிடவல்ல
செயல்காட்ட வேத னுலகத்
தனப்பறவை யுந்துயில ரவிமதியு மெட்டாத
வளவோங் கியெங்கு மறைய
அடர்ந்தாதி சேடன் முடி வேர்கொண்டு நின்றெழும
ராமர மிராமனுற்றே. (உ௰உ)

உற்றவா னரவீரர் கண்காண வில்வளைத்
துயரேழ் மராம ரங்கள்
ஊடுருவ வாளி விட்டெதிரிலாச் செயவீரா
வுத்தண்ட ராம னிற்கப்
பொத்தோடி ஏழ்மரமு மேழுலகு முருவிமேற்
போதற் கிலக்கே ழிலாதாற்
பொருந்திடத் தூணியினி லவ்வம்பு வானரர்கள்
பொங்கிக் களித்தாற் பரித்தார்
மற்றங்கண் நிற்குமென் பாமலையை நோக்கவது
வாலியொ டெதிர்த்த வெருமை
வடிவமுள வசுரனும் துந்துபியை வதைசெய்து
வாரிப்பிடித்தெறிந்த
வத்தியித னுற்சாப மவனெய்தி னனீ
தசைக்க முடியா மலுற்ற
தாமெனக் கால்விரலி னெடியின வதைராம
வநுசன்தெறித்து விடவே. (உ௰௩)

Koviloor Digital Library


தெறித்துவிட எருமையிழி என்புமலையறராம
செயமென்று வந்து வானிற்
றெசக்கிரீ வன்கொண்டு செல்லுமொரு பெண்கணீர்
சேரவெம் மவர்கூட்ட நாப்பண்
எறிந்தவணி கலனுள்ள கிழிகாண்க வெனமுன்ன
ரிடல்கண் டிராமன் கவன்றே
ஏங்கல்கண் டெம்மிறைவ சுக்கிரீவ னரசாள
எறுழ்வாலியைக் கொன்று நந்தம்
குறிக்கோள்க ணிறைவேற ஏழுபது வெள்ளங்
குரங்குப் படைக்கூட்ட மெங்கும்
கூடியோடித் தேடவிட்டுப் பிராட்டிநிலை
கொண்டவிட மோர்ந்து மீட்கும்
நெறிசெய்ய வேண்டுமென வநுமனுரை செய்யவது
நிகழ்த்தற் குவந்து விரைவாய்
நீள்வழி நடந்துபோய்க் கோதண்ட பாணியாய்
நின்றனன் ருச ரதியே. (உ௰௪)

தாசரதி வாலியை வதஞ்செய்ய வோர் மறைவு
தனில்நின்று சுக்கிரீவபோய்த்
தமையனேடு வெள்ளிடைப்போர் தொடங்கென்றேவ
தம்பியறை கூவ வாலி
யோசனையி லாதுபோ ருக்கெழவு மவனையிவ்
வுள்வயண மென்ன வென்று
யோசித்த னன்றெனத் தாரைதடை செய்யவதை
யுதறிக் கதங்கொண்டெழுந்து
பூசலிட விருவரும் சுக்கிரீ வனூற்ருது
பொறிசித றியோடி வந்து
புகலடைய ராமனை வயனீவி ருருவப்
பொருத்தத் தொருமை பெறலால்
நேசவிந் நிலையுற்ற மலர்மாலை பூண்டடல்
நிகழ்த் தென்றியேவ மீண்டு
நேர்பொருத கோதண்ட ராமன்மறை முகமாக
நின்று பாணத்தைவிடவே (உ௰௫)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

நின்றுவிடு பானநிலை நில்லாமன் முதுகுற்று
நெஞ்சு வழியாக வோட
நிசமறிந் தமைதியாய் வாலியுடல் விட்டு நன்
நெறிசேர வரசு நீயா
கென்றுசுக் கிரீவர்க்கு முடிசூட்டி யங்கதனை
இளவர சனுக்கி வைத்து
எழிலருவி மலையான கீழ்க்குந்து மலையைவிட்
டிருவரு மதங்கர் மலைபோய்
அன்றுசொல் லியவாறு கார்கூதி ரிருதுசென்
றனபின் னுஞ்சுக் கிரீவ
னுதியோர் யாரும் வராதா லிலக்குவன்
அதிகோப மாயங்கணேக
இன்றுகெட வரலுடன் ஏகென்று தாரையை
எதிர்கொள வனுப்பி யநுமான்
இறைஞ்சி யின்றல்லது நாளையே வானரரி
யாவரும் வருவ ரெனவே. (உ௰௱)

வானரி யாவரும் வருவரெனும் மொழிகேட்டு
மனதுசின மாற விளையோன்
மலைவனந் தீவிவை யிலுள்ளவெழு பதுவெள்ள
வானரவர் குழாங்களடரச்
சேனையதி பதிநீலன் வந்துதாழ்ந் திடவுமென்
டிசைகளுஞ் சென்று தேடிச்
சீதேவி நிலைகண்டு திங்களொன் றினிலிங்கு
சேர்வீரென வாணைகொண்டு
தாளையணி செல்லயநு மானிடம் தென்றிசை
சார்ந்து நீதேடு கென்று
தனியுரிமை யொடுசொல்லி கணையாழி யையும்மீந்து
தாசரதி யேவ மலைகள்
கானகமெலாந் தேடி வரும்வழியில் வானரர்கள்
கனல்வீசு பாலை யதனில்
கால்நொந்து வெந்தொதுங் கிடமின்றி யோர்பிலங்
கண்டதி னுழைந்து செலவே. (உ௰எ)

Koviloor Digital Library



சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

நுழைந்து செலநீள்வழியி லிருளெலாம் புக்கிடம்
நோக்கியிங் குற்ற தென்ன
நோக்க மிருள் சூழவழி யறியாது மீளமுன்
னுற்ற வழியது வுமறையப்
பழையபடி யுட்செல்ல வநுமன்வாற் றுணைகொண்டு
பற்றித் தொடர்ந்து கவிகள்
பாழும்பிலம் புக்கச் சுவர்க்கமிங் குற்றதோ
பாருமென் றதிச யித்து
விழையுமழ கியதான பாழ்நகரி லெங்கெங்கு
மேவித் திரிந்து தேடி
மின்னுருப் பொன்கொடியொருத்திதவ வடிவொடு
விளங்க வவள்சீதை யென்று
குழையுமன தொடுநோக்க நுனிமூக்கில் விழியொன்று
கொண்டதா லில்லை யென்றுட்
கொண்டணுகி யிவள்சுயம் பிரபையென வரலாறு
கூற வனுமா னறிந்தே. (௨௰௮)

அறியமுடி யாதபே ருருவெடுத் தப்பிலம்
அடங்காது முட்டி நிமிர
அடியோடு பெயர்ந்திரண் டாய்வீழ்ந்து மேற்கிற்பி
லத்தீவ தென்ன வின்றும்
பிறியாத நிலையாக விண்ணுலக மச்சுயம்
பிரபையுற மீண்டு தேடிப்
பிலவங்க மோரிடத் துயில்கொள் ளுவேளைதூம்
பிராக்கத னெதிர்ந்து சீற
வறிந்தங் கதன்கண்டு மாய்க்க வானரர்விழித்
தகலிட மெலாந்தேடி யெய்ப்புற்
றலுத்தல்ல லுறுவதைச் சம்பாதி கண்டுநீ
ரணைவரு மிராம நாமஞ்
செறிவுறச் சொல்லுமென வவ்வாறு சொல்லவும்
சிறகுசீ ருறவ ளர்ந்து
செம்மையுற வக்கழுகி னரசுமன மகிழ்வுற்று
சீதையைக் கண்கொண்டு கண்டே. (௨௰௯)

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

கண்கொண்டு கண்டதி தோசீதை தென்னிலங்
காபுரித் தீவி லொருசார்
கடுங்காவ லுட்சிறை இராவணன் செய்யக்
கலங்கியொரு நாளை யுகமா
யெண்ணிக் கழிக்கிருள் கடல்தாண்டி விரைவிலங்
கேகிய வளைக்கண் டரக்கர்
இயல்புவலி கண்டுமீண் டறிவித்து வேண்டுவ
தியற்று கெனவாணி லேகத்
திண்மையுள வொவ்வொரு வரும்பலஞ் செப்பவிச்
செகதலத் தூழி வருமுன்
தெரிவிக்க வானபணி யேற்று விரைகையில் மேரு
சீறிதிடற விந்த வொருகால்
நண்ணும்வலி யின்னுமுள தாகையால் நானங்கு
நாடுவேன் மீள கில்லே
ஞதலா லநுமனே தகுமெனச் சாம்பவன்
அநுமன்முன் னிலையி னின்றே (ௐ)

நிலைநின்ற வுன்வலிமை சொல்லுதற் கெளியதோ
நீயுதித் திட்ட போழ்தின்
நெடியதனு மூலத்தி லிரவிமதி யொன்ருய
நேயமொ டிலங்கல் கண்டு
தலைகொண்ட நாகமிர வியைவிழுங் கப்புகல்
தவிர்த்துண்ண வென்று களவுந்
தன்மையோய் இந்திரன் வச்சிரா யுதவலிமை
தன்கொடி றுரோம வலிமை
மலைந்திடக் கொண்டவா வாயுபக வானருமை
மைந்தனே யாஞ்சனேயா
வாயுதே வன்கலை யொடுக்தியுன் ஞன்மறைய
வைந்தவா வமர ரெல்லாம்
தொலையாத வலிமைதர வேற்றுளாய் கலையெலாஞ்
சூரியன்முன் னின்று கற்ருய்
சுவேதவண் ணுபிரம சாரியே மாருதீ
சொலவல்மிக் கதுனது புகழே. (ௐக)

Koviloor Digital Library



சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

## வானராதிப ருறவுப்படலம் (வேற்றிசைப்பா)

புகழ்மிக்க யோகினித் தாய்சபரி சொன்னசொற்
போற்றியவ் வாறு செய்து
பூதல மெலாந்தேடி வரவா னரங்களைப்
போக்கியது மவைகள் தேடி
மிகநொந்த போதுசம் பாதியாற் றெளிவுற்று
வெகுவிரை விஞங்க ணேக
வீறுகொண் டெழுநிலைமை யானதுங் கூறினேம்
விரிபுக ழணங்கு கற்பின்
தகவா லிலங்கையொ டிராவணு தியர்குழாம்
சாம்பலாய் வெந்து நீற
தாகச்செய் வல்லமை யிருந்தும் பதிக்குயர்வு
தருதற் கடங்கி யநுமன்
அகலிடத் தைச்சுடச் சுடுமெரியவ் வநுமனுக்
கமிர்தாய்க் குளிர்ந்திருக்க
அருள்செய்த வாறதுங் கூறுவோம் தீமையற
அன்னையின் வாய்மை கேட்டே. (௩௰௨)

## அநுமன் ரௌத்திரா காரப்படலம்
## உத்தர காண்டம்

கூறற்கரும் பெரிதாகிய கொள்ளைக்கனல் மண்டி
நீறச்செய லங்காபுரி நீருதேசனு மிரளக்
கோறல்புரிந் திரவுத்திரம் கொண்டேயட லநுமான்
ஆறப்பெறு சதசித்தியை யறைவோர்வினை யறுமே

Koviloor Digital Library


சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

கேட்டவுட னுள்ளமொ டுடம்புபூ ரித்துவரு
கிரியென வளர்ந்து மென்மேல்
கிட்டியரு காகச் சுவர்க்கமுந் தோன்றிடக்
கெவளித்திலங் கைநகர்மேல்
நாட்டம்வைத் தலைகடல் கிழியும்விசை கொண்டுயர்
நபங்க வழியாய் மயேந்த்ர
நாகநின் ஸ்ருகவிந் திரனு லொளித்தமை
நாக மலைமே லெழுந்து
வாட்டந் தவிர்ந்திங்கு தங்கியே குகவென
வழுத்தவவ் வாறு மீண்டு
வருகையிற் செய்வமென வேகவுஞ் சுரசையவள்
வான்மறைய வாய்திறந்துள்
ஒட்டமெங் கென்வாயி லன்றியென நிற்கவா
யுட்புகுந் துருவி வரலு
முயர்நிலைமை யவளெய்த வங்கார தாரையவ
ளுக்கிரங் கொண்டெதிர்த்தே. (௩௰௩)

எதிர்த்துநின் றவனண்ட மறையவா யைத்திறந்
தேகும்வழி மூட வனுமா
னெளிதாக வாய்வழி புகுந்தகடு கிழியவெளி
யேறிமடி வித்தி லங்கைப்
பதிசேர நான்முகத் தொருமாது காவலாம்
பணியைமேற் கொண்டா ளெதிர்க்கப்
பதைபதைத் துயிர்வீய மார்பிலோ ரறைவிடப்
பதறி யிதுவே தனன்று
விதித்தவழி யென்றிழிய வநுமணு வுருவாகி
விரிநக ரிலங்கை யெங்கும்
மேவியந் நிசியினிற் றேடித் திரிந்துளம்
வெம்பித் தியங்கி யொருசார்
கதித்து வளர்சூழலிற் சார்ந்துகண் ணோக்கக்
கலங்கியுள நொந்து வாடிக்
கண்கணீர் சொரியக் கரைந்துருகு சீதையைக்
கண்டு விலைநிகழ் வறியவே. (௩௰௪)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

அறியவறி யாதவுரு வோடிருந் திடுபோ
தரக்கிய ரிரவணன்றன்
ஆக்ஞைமேற் கொள்ளெனச் சீதையைப் பலசொல்லி
அச்சுறுத் துதலு மாங்கே
நெறிதவறி ராவணன் சகலவை பவமொடந்
நிசியி லங்குற்று வேண்ட
நிந்தனைசெய் தோர்தூசி யாயவனை ஏசிடும்
நிலைமையுங் கண்டு நன்மை
செறியவுயர் திரிசடை சீதையைப் பலவாறு
தேற்றுதலு மோர்ந்து காவல்
செய்யரக் கியரெலாந் துயிலவொரு மந்திரஞ்
செபிக்கவு மரக்கி மார்கள்
மறித்தவர்கள் போற்றுயிலல் கண்டசா னகிதுன்ப
மாறவழி வாய்த்த தென்றுண்
மகிழ்வாகி யுயிரைவிட வங்குற்று நிற்குமொரு
மாதவிப் பாங்கர் செலவே. (௩௰௫)

செலல்கண்ட மாருதி பதறிவெகு விரைவாக
சீதைமுன் ஞேடி வந்து
திருவடிக ளிற்ருழ வாய்ராம மந்த்ரம்
செபிக்க வதுகண்ட சீதை
யலதுசெய நீங்கவு மிராமதூ துவநாம
மநும னெமதிறை வனீந்த
அடையாள முளதென்று கணையாழி யையுமீய
வஃதமித மாகி யுயிர்மீண்
டுலவவும் பரிசதரி சனவேதை செய்மணியஃ
தொப்பவும் புதுமை யெய்தி
உயிர்காத் திரட்சித்த நீயிரண் டேழான
உலகழிந் தூழி வரினும்
நிலையாக என்றும் சிரஞ்சீவி யாய்வாழ்க
நியதி தவிராத கற்பு
நெறிநின்ற வுத்தமியள் நான்என்னின் என்றுமன
நெகிழ்வாக வாசி சொலவே (௩௰௬)

Koviloor Digital Library

சிவமயம்
அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

ஆசிசொல வாக்கமுறு மநுமானை நோக்கியிவ்
வாழிப் பரப்பைக் கடந்திங்
கணுகியதெவ் வாறென்ன வவ்வுருக் காட்டநின்
ருகாய முட்ட வளரக்
கூசியவ் வுருவெல்லை காணவெட் டாதமைதி
கொள்ளென்ற போதின் முன்போற்
குறியவுரு வொடுநிற்க வீரகேன் என்றனைக்
குறுகிவேற் ருணி யாரும்
வாசியியல் பொல்லாமை யாலிரா வணனுக்கும்
மறுமாதை வலிது தொட்டால்
மண்டைசுக் காய்வெடித் தழிகெனச் சாபமுள
வாருலு மிந்த மட்டிக்
காசினியி லுயிர்வைத் திருக்கிறே ளெருதிங்கள்
கழியுமுன் மீட்க விலையேல்
கண்டிப்பு நானழிதல் அந்திமக் கிரியையங்
காக்கிடச் சொல்லு கெனவே. (௩௰எ)

சொல்லுகெனு மந்நிலைமை எய்தாது வெகுவிரைவில்
துன்பமது நீங்கு மின்று
தொட்டரக் கர்குழாம் அழிவெய்து மெனமனச்
சோர்வற்று மிக்க மகிழ்வாய்
நல்லதென வவள்கலை யிலுள்ளசூ டாமணியை
நல்கி விடையீய வநுமன்
நானிங்கு வந்துமி விராக்கதர் குழாத்திற்கு
நாசம்விளை வாக்காது மீண்டு
செல்லலெப் படியென்று பொழிலொன்றை மாளவே
சிதைவித் தெடுத்தெறிந்து
செவிடுபடு மாருக வார்ப்பொலி யெழுப்பவச்
செய்தியை இராவணன் கேட்
டல்லல்செய் புன்குரங் கதனையு யிரோடிங்
கடக்கிக் கொணர்தி ரெனவும்
அவ்வுரை தலைக்கொண்டு போனகிங் கரரெலாம்
அநுமனால் நாச முறவே. (௩௰அ)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

நாசமுறு செய்திகேட் டுச்சம்பு மாலியவ
ஊச்செல்லு கென்றேவ வன்ஞேன்
நால்வகைப் படையோடு சென்றனு மனுல்மாள
நாடிய விராவ ணன்கேட்
டாசறப் பஞ்சசே ஞதிபதி செல்கவென
வனீகநிரை யோடு வந்தாங்
கதியெக் களிப்புட னிருக்குமநு மான்மீதி
லாத்திரங் கொண்டெ திர்த்துப்
பூசல்செய் யத்தோர ணக்கம்ப மருகிற்
பொருந்து மநுமான் வளர்ந்து
புடைத்தழித் துப்பஞ்ச சேஞதி பதிகளுயிர்
போக்க வதுகேட் டிராவ
ணேசனரு மைந்தனும் அக்கய குமாரணைய
னீகநிரை யோ டனுப்ப
நிகரில்லை யென்றுவந் தனுமனுல் மாண்டுடல்
நிலந்தரத் தழிவு படவே. (௩௰௬)

அழிந்துபட் டமைகேட்டெ லோரும்புலம்புமொலி
யதுகேட்ட விந்திர சித்தன்
ஆகுலங் கொண்டுவந் தனுமனெடு வெய்யபோர்
ஆற்றி யடல்கண்டு வேறு
வழியின்றி யநுமன்மேற் பிரமாத்திரத் தையபி
மந்திரித் தேவி விடவும்
வலிகுன்றினுற் போன்று பிரமபாசப்பிணிப்
பாக்கற் கிடந்தந் தடங்க
மொழியுமது கேட்டரா வணனக் குரங்கையென்
முன்புயிரி ஞேடு கொணர
மொழியென்ன விந்திரசித் தவ்வாறு கொடுசெல்ல
முற்றுணர்ந் தாஞ்ச னேயன்
விழிகொண் டிரண்டேழு லோகரெண் டிசையோர்கள்
விதிர்விதிர்த் தேவல் கேட்க
மேல்கீழொ டெண்டிக் குளோரையும் பார்த்துமுக
மேறிட்டு நோக்கல் கண்டே. (௩௰)

Koviloor Digital Library


சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

கண்டடங் காதுடலும் வெகுளியும் பொங்கமிகு
கம்பிர மோடெ ழுந்து
கட்டியுள பிரமபா சம்பொடிப் பொடியாய்க்
கழன்ருேட வுதறி நின்று
மண்டலச் சுருணையாம் வாலா சனத்தின்மேல்
வைகியவன் வார்த்தை யாட
மாபராக் ரமராம தூதனுன் சீதையை
வணங்கிப் பணிந்தே விடுத்துத்
தெண்டனிட் டெம்பிரா னைச்சரண கதியென்று
சேரினல் லாது செல்வச்
சிறப்புமுன் சூழலும் வாழ்நாள் வரங்களும்
சேரவொ ரிராம பாணம்
உண்டுவிடு முன்மீது கருணையாய்ச் சொல்வதீ
துணரென்ற வார்த்தை கேட்டே
யுருத்துச் சினந்திக் குரங்கினைக் கொல்லென்ற
வுடன்வீ டணன் றடுத்தே (௩௰௧)

தடுப்பரிய பெருவலிக் கழகன்று நீதியுமஃ
தன்றுதூ தைக்கோற லென்னச்
சரிதீம்பு புரிவாற் குரங்கைப் பிடித்துவளர்
தழல்வாலின் மூட்டிப் பொசுக்கி
விடுத்தோட வோடத் துரத்தென்ன நிருதரினில்
வீரர்பலர் சூழ்ந்து பற்றி
மிகுவலிமை யொடுபிடிக் கப்பிடி கொடுத்தநுமன்
மீரு திருக்க வாலில்
நெடுங்கயி றடங்கலுள தூசுக ளடங்கலும்
நெய்தோய வைத்து வலிதாய்
நீளநீளச் சுற்றி மேலும்நெய் தோய்த்ததி
நெருப்பிடப் போதல் கேட்டிங்
கிடும்புசெய் குரங்கினுக் கேற்பட்ட கதிபாரு
மென்றசுரர் கும்பு கூடி
ஏளனம் பேசிச் சிரிக்கவது சனகிக்கும்
எட்ட மிகவும் பரிந்தே. (௩௰௨)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

பரிவுவைத் தநுமன்மேற் சுடரொளித் தெய்வமே
பனியாய்க் குளிர்ந்து கருணை
பாலிக்க வேண்டினேன் எனச்சுடா மணிமுன்னர்
பாலித்த மாதுவேண்ட
எரிகொண்ட வநுமன்வாற் கொடுகொடுக் கக்குளிர்ந்
தென்பும் நடுங்கல் கண்டீ
தேதெம் பிராட்டிய ருடானென்று தேரவெரி
எல்லாம் குளிர்ந்த தொன்றே
விரிபுவன அண்டமே ழேழொடெழ் புவனவெரி
வெய்ய நரகேழி லெரியும்
விடவிடக் கக்குளிர வூழியனலுங் குளிர
மிதுலையாள் கற்பி னனலாற்
றரியலர்க ளுர்சுடர் கநுமனுயர் பேருருத்
தாங்கி வானத் திலோங்கித்
தாவவும் பற்றிப் பிடித்தராக் கதரெலாம்
தடுமாறி வீழ்ந்து படவே. (௯௦௩)

படபடத் தெரியடர வாலிலெரி கொண்டதீப்
படரவெங் கெங்கு நீட்டிப்
பற்றவைத் திடவிலங் காபுரியை யுண்டவழல்
பாதகரின் மீதுமண்ட
அடடாவிதென்னென மருண்டரக் கர்குழாம்
ஆர்கலி யினுய்வு தேட
அண்டவிட மில்லாமல் மாடமாளிகை களெரி
யடர வுமிரா வணன்வா
ழிடமுமெரி கொள்ளவீ தூழி யனலல்லவே
என்னென் றுருத்து விண்மே
லெய்தவு மிராக்கதர்கள் அநுமனெனும் வன்குரங்
கிட்டதீ யெனவெ குண்டாங்
குடனக் குரங்கினு யிருண்டு தீத்தே வினையு
மோடாது பற்றி வருகென்
றுரைக்கவு மரக்கர்கள் அடர்ந்தனு மனைச்சூழ்ந்
துடற்றத்தொடங்கல் கண்டே (௯௦௪)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

கண்டகர் களைச்சூழ வொன்றாய் வளைத்துக்
கனன்ற வெரிகொண்ட வாலின்
கட்படச் செய்யக் கடக்க மாட்டாதக்
கடங்கட ரெரிந்து மாளத்
தண்டலைக் குளிர்சூழ னீழலிற் சனகியை
தாழ்ந்தஞ் சலித்து வானிற்
றாவவாங் கக்கினித் தேவனு மறைந்திடச்
சடுதியிற் செல்லு மநுமன்
விண்டல மிழிந்துமை நாகவரை யிற் றாழ்ந்து
விளைவுற்ற வாசொல்லி மீண்டு
மேலோங்கி வானவழி கொள்ளவெதிர் பார்த்துள்ள
வீரவா னனரை நோக்கி
யண்டவெளி நின்றுவிஜ யஞ்சயஞ் சயமென்ன
அறிவித் திறங்கி விரைவாய்
ஆவலொ டிருக்குநம் மரையர்க் குரைப்பமென
ஆர்ப்பொலி யெழுப்பி வரவே (௯௰௫)

வரும்வழியில் மதுவனங் கண்டுமது வுண்ணவநு
மானினுத் தரவு கொண்டு
வானர்கள் நீணடநா ளாகார மில்லாத
வாட்டந் தவிர்க்க மாந்திப்
பெருங்களிப் பெய்திஎதிர் காவல்செய் வோனைப்
பிடித்தடித் தோடத் துரத்தப்
பிழைத்தெனென் றோடிச் சுக்ரீவர்க் குரைக்கவிது
பிழையன்று தித்தித்த செய்திப்
பொருளென்ற போதுகண் டேன்கண்டேன் கற்பொளிப்
பொலிவுகொள் தெய்வ மனைய
புண்ணியத் திருவுருச் சீதா பிராட்டியை
புனிதையடை யாள மாகத்
தருசுடா மணியீது என்றுதித் தித்தமொழி
தந்திரா கவனை யநுமன்
றாழவமிழ் ததிமதுர மதுகொண்ட களிகொண்டு
சவுபாக்ய சுபமோங்கவே (௯௰௬॥)

Koviloor Digital Library



சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

சுபமோங்க வடையாள முற்றதாற் பயணம்
தொடங்குமின் விரைவினென்று
சொல்லநீலன் தலைமை தாங்கிவா னரர்தளம்
சூழ்ந்திட நடத்தி வரவும்
செபநாம னநுசனிரு வருமநும னங்கதன்
சிறுபுற மிவர்ந்து வரவும்
திரண்டவா னரர்கள்படை புடைசூழ நடைகொண்டு
தென்கடற் கரையடைந்தார்
தபசிகட் கன்றபய மீந்தது பலிக்கவும்
தாயருரை நிறைவு பெறவும்
தானவ ரடங்கலு மொருங்கே யழிந்திடத்
தமிழ்முனி வனன்றளித்த
உபதேச மொடுபடைக் கலநலந் தருமுயர்வி
னுலகெலாம் உய்வு பெறவும்
உத்தமோத் தமிகற்பி னெதிரிலா வலியதல
முறுபுகழு முயர்வு பெறவே. (௬௦௭)

**அநுமன் ரௌத்திர காரப்படலம்** (வேற்றிசைப்பா)

பெறற்கரும் பேறுபெற் றநுமா னரக்கர்கள்
பேதுறும் செயல்கள் செய்து
பெருநெருப்பைச் சுடநீரிற்குஞ் சீதளம்
பெருகு குளிராக வமையும்
சிறப்புத் தனக்கெய்தச் தெய்வீகக் கற்புடைச்
சீதா பிராட்டி யருளிச்
செய்யுமுறை யொடுசுடா மணியையும் பெற்றுஅத்
திருமகட் காழி யீந்து
தறவுண் டுவந்தசெய வானவை யுரைத்தனம்
நாட்களோ ரேழின் னிலங்கை
நகரினி லிராவணு தியர்போரிராப் பகல்
நடத்தியே சனகியவள்பால்
அறம்பிழைத் திட்டவோ ராண்டினில் இறுதியாம்
ஆடியின் அமர பட்சத்
தைந்திதியி லழிவான வாறதுங் கூறுவோம்
அருணெறி தழைக்க வுலகே. (௬௦௮)

Koviloor Digital Library

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

## அவதார சித்திப்படலம்

வினையற்றிட ராமாவெனு மெய்மந்திரமுண்டு
முனைவெம்பகை தீர்ந்துய்த்திட முரண்மாருதியுண்டு
நினையத்தகும் வைதேகியால் நித்யத் துவமுண்டு
மனைமாட்சி யிம்மையினும் மறுமையின் முத்தியும் உண்டே.

உலகினண் டாதவெரி மண்டிய தடங்கவு
மொழிந்து பாழ்பட்ட நகரை
யொழுங்காக முன்போன்று சமையென்ன மயனுக்
குரைக்கவ் வாறு செயவும்
இலங்கேச னுங்கரசவைகூட்டி யநுமனின்
இடும்பிற் கிடும்பு செய்யு
மியல்பற்றி யோசிக்கத் துர்புத்தி துன்மார்க்கர்
எல்லோ ருமேயி யம்பப்
பலவாறு நற்புத்தி வீடண னுரைக்கவப்
பாதகன் வெகுண்டு சீறிப்
பகைவனோ டுறவுகொண் டெனது செல்வங்கொளப்
பார்க்குந் துரோகி யடமுன்
நிலையினில் லாதோடு வோடென வெருட்டியவ
னிந்தித் திகழ்ந்த நிலையி
னின்றுபுக லிடமெங்கு மில்லாது புகலா
யிராகவனை நாடி வந்தே (௧௰௯)

வந்தவ னிராகவா சரணென்று ககனத்தின்
வழிநின் றீழ்ந்த போது
வாயுசுத னுஞ்சலீ ரெனவந் திராமரை
வணங்கித் தசக் கிரீவன்
நிந்தித்தெனைக் கொல்ல வொட்டாது காத்தவன்
நீதி தவிராத தூயோன்
நிறையன்பி னோடெம் பிராட்டியைக் காத்திரா
னின்றதிரி சடையினையன்
எந்தையே ராகவா சரணென்று வந்தனன்
இராவணற் கிளைய னென்ன
ஏண்டழைத் திடுகெனச் சுக்ரீவன் வீடணனை
இட்டுவர வந்து சரணம்
தந்தென்னை யாள்கெனத் தாழவு மகிழ்ந்தின்று
தந்தன மிலங்கை யரசு
சகதல மிரண்டே ழராவுமா நாமநிலை
தருகாலம் வரையுனக்கே. (௨௰)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

உனக்கே இலங்கைப் பெருந்திரு வெலாமென்
றுரைக்க வடியார் குழாத்தி
லொருவனுய்க் கொண்டு நல்கிடுந் திருவடியு
முதவு கெனவேண்டி நல்கத்
தனதுநுத லினுமுடியி னுங்கொண்டு வலம்வந்து
தாழவு மிலங்கை நகரத்
தந்தரங் கஞ்சொல்லு கெனவொன்று மொளியாது
சாற்றலுற் ருனவ் விலங்கை
அனந்தனும் வாயுதே வனும்வலிமை காட்டுமிய
லாலிமய வரையின் முடிமூன்
றற்றுவீழ்ந் ததிலொன்று கொண்டதவிராவணன்
ஆட்சியொடு நுண்மை மிக்க
வியைமாங் கருவிபல கொண்டததி கூட்டமாய்
வெய்யவர் களிடமும் வலமும்
மிகவெச்சரிக் கையாய்க் காவல் செயவுற்றது
மேலூமங் குறைக்கின்ற பேரே. (ருமக)

பெயர்கொள் ளகம்பனு நிரும்பனு மகோதரன்
பிசாசனே டிரவி பகைஞன்
பெரும்பக்கன் றுன்முகன் கும்பன் வேள்விப்பகைப்
பேரோன் விலங்கு நாடன்
தியங்குபுகை நாடனென் றுள்ளார்க ளெவரினும்
தீயவன் பிரதத்த னென்போன்
தெசக்கிரீ வன்றம்பி கும்பகர்ணன்பலம்
செப்பரிது வாணி வஞ்சச்
செயலினுற் றூக்க மென்றும்முள னிராவணன்
சேயிந்த்ர சித்த னதிக
தேகனுந் தேவாந்தகன் நரர்க ளந்தகன்
திரிசிரா வென்று ளார்கள்
அயனுடைய பேரனின் ருேன்றலாய்த் தோன்றியவி
ராவணன் றிக்கு விசய
மதுசெய்து வருபோழ்தில் இறைவனுறை வெள்ளிமலை
யாகாய வழியினின்றே. (ருமஉ)

Koviloor Digital Library



சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

நின்றுவலம் வந்துபோ மாறுதடை யாகவதை
நிலைபெயர வலிய தோளால்
நீண்முடியின் மீதேற வைக்கமா தவனிடது
நெடியகால் அடியின் விரல
தொன்றினுற் சிறிதழுந் திடவூன்ற வரையினிடை
யுள்ளகப் பட்டழுந்தி
யோராயிரம் வருடம் அலறித் தவித்துமறை
யோதுதற் கினிய யாழாய்த்
தன்தலையி லொன்றினைக் கொண்டுகை யொன்றதைத்
தண்டொடு நரம்ப தாக்கிச்
சாமகா னஞ்செய்து மகிழ்வித்து முக்கணன்
தருமெதி ரிலாத வாளேர
டன்றிமுக் கோடியொ டரைக்கோடி வாழ்நாளும்
ஆக்கமும் பெற்று வந்தான்
அட்டகஜ முட்டிமுறி கொம்பைமார் பிற்கழக
தாய்க்கொண் டுநிலை யாகவே (௩௰௩)

ஆகமத னிற்பதிய வைத்துளான் கோனொன்ப
தரியணைக் கேறு படிக
ளாகக்கிடத்தி யதன்மேன் மிதித்தேறியவ
ஞயினும் வலிது பற்றப்
போகரவ மதுகேட்ட பூசைசெய் வாலிபின்
புறத்தினசை யாது வாலிற்
பொருந்தச் சுருக்கிட் டதிற்றிருங்க வைத்தபடி
புக்கி யெண்டிசை யிலேழு
சாகரங் களினும் படிந்துவர நண்பனுய்த்
தழுவிமீண்டவ னெருக்காற்
றருக்குடன் கார்த்தவீ ரியனேடெதிர்த்தத்
தருக்கழிந் துறவு கொண்டோன்
ஏகமென் றேதுமறை யாயிரம் வல்லவன்
என்றுண்மை யுளவு கூற
இராகவன் கேட்டுள மகிழ்ந்துசீ தையைமீட்க
எண்ணி வருணனை நினைந்தே. (௩௰௪)

Koviloor Digital Library



சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

நினைந்து வெகுவாயேழு நாட்கள்புல் லணைமீதி
னிற்கிடந் துரிய விஞ்சை
நேர்மையுட னேதியெதிர் பார்த்தவன் வராததால்
நீள்சினங் கொண்டு சலதி
யனைத்துங் கொதித்தாவி கொண்டுவறள் புழுதியா
யாக வனல்வாளி யேவ
ஆழியோ ரேழுமழல் தாங்காது கொதிகொள்ள
வப்பொழுது மவன் வராதால்
முனைந்து பிரமாத்திரம் பூட்டிவில் வளைக்கவும்
முடுகு விசையோடு கருணை
மூர்த்தியே சரணென்று வருணன்வந் தடிதாழ
முன்சினந் தீர்ந் ததற் கொப்
பனையாய் மருக்காந் தரத்தசுரர் கும்பெலாம்
பாழ்படப் பாண மதனைப்
பயன்படுத் திடவருண ராசன் எமக்கென்ன
பணியென்று வேண்ட வுடனே (௱௩௫)

உடனிலங் காபுரிக் கேகவழி வேண்டுமதை
யுதவுகென மகர மச்சத்
துடன்ற வேழாங்கடலி நிகழுவது தீர்க்கவாங்
குற்றதாற் ருமதித்த
கடலரைய னுததிமீ தணைகட்டி யேகும்நான்
கலைவுரு தணையை யென்றுங்
காப்பெனென வலையடங் கச்செய்ய வானரர்கள்
கற்குன்று மலைக ளலைவாய்
திடலடைய விடநளன் ஒருவனே இருகையாற்
செவ்வையாய்ப் பெற்ற டுக்கிச்
செய்தான் பதிற்றுபத் தொடுபத் தியோசனைகள்
திரு வணையி னகல நீளம்
இடம்பெற விராகவன் கண்டுசா னகியவளை
யெய்தினுற் போன்மகிழ்ந்தான்
எழுபத் திரண்டுவெள் ளஞ்சேனை யின்றிரள்
இலங்கைக் கெழுந்த தன்றே (௱௩௬)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

எழுபத் திரண்டுவெள் ளஞ்சேனை யின்றிரள்
இலங்கைக் கெழுந்த பொழுதில்
ஏகிவழி கூட்டிவீ டணன்முன்னச் செல்லவு
மிராம லக்குவண ரநுமான்
ஒழுங்குற பின்செல்ல வந்திலங் காபுரியி
னுற்றச் சுவேல மலையி
னுயர்சிகர மதினின் றிலங்கையள வெல்லைகண்
ணுறவுளவ வன்விளம்ப
முழுதுணரு மெல்லையி லிராவணனு மாங்கடுக்
குபவிருக் கையதிலேறி
முகமொரு பதுங்கொண் டிராமர்சே னையைநோக்க
முகமுக மெதிர்கொ ணோக்கம்
விழுமந்த வேளையிற் சுக்கிரிவன் முடுகுகடு
விசையோ டெழுந்து பாய்ந்து
மின்னுமணி மகுடங்கள் பத்தையும் பறிபட
வெடுக்கென் றெடுத்து வரவே (௫௰எ)

வரல்கண்டு மகிழ்வாக ராமரின் றிருவடியில்
வைத்தவன் வணங்கி நின்றான்
வானர ரிலங்கையை வளைத்துமுற் றுகைசெய்ய
வாக்கியங் கதனை யேவிச்
சிரசுபத் துடையோ னிடந்தூது சொல்லிடச்
செய்திணங் காது கண்டு
சினந்துபோர் முரசறைய வானரர்க ளெழுபத்
திரண்டுவெள் ளமுமெ மும்பி
முரணரண களமடைய தசகண்டன் மாலியவான்
மொழியுநற் புத்தி கேளா
மூர்க்கமோ டசுரர்கள் படையா யிரம்வெள்ள
முடன்வந்து போர்தொடுக்க
இரணகன பதின்வீர ரெதிரெதிர் மலைந்தன
ரிராவண மநும னிருவர்
எதிர்கொள் குத்துப்போரி லநுமனு லசுரனு
மிளைக்க வநுமனு மவாறே. (௫௰அ)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

அவ்வாறிவ் வாறான போர்கண் டிலக்குவன்
அரக்க னொடு பொருதி வேலால்
அலக்கணுர வநுமனின் றோண்மே லிராகவன்
ஆரோ கணித்தெ திர்த்துத்
தெவ்வனது பத்துமணி மகுடமும் வில்லம்பு
சேர்படை படைக்க லன்கள்
திரளசுரர் கும்பெலாம் தூளிபட வெறுமையாய்த்
தீர்க்கத் தசக்கி ரீவன்
கவ்வையுற் றொடு தனிய னாகியெதிர் நிற்றலைக்
கண்டின்று சென்று நாளைக்
களைதீர்ந்து படைபடைக் கலனோடு வருகெனக்
காருண்ய ராமனுய்க்க
இவ்வா றெலாந்தொலைய வூர்புக் கிராவணன்
எழுதீவு மேழு கடலும்
ஏழுபில மேழுமலை யேழுதல மெங்குமுறு
இராக்கதரை வருக வென்றே (ருயகூ)

என்றன்று தூதுவரை யேவிமிக வாழ்ந்ததுயி
லெய்திடு மியற்கை கொண்ட
இளவலை யெழுப்பெனக் கிரங்கரரை விட்டவர்க
ளியலாமை கண்டி யானை
நின்றுமிதி கொளயாளி யூன்றிமிதி கொள்ளவே
நினைவதின் வராமை கண்டு
நெடிது நடை கொளுமாறு கந்துகப் படையைவிட
நெட்டிமிதி கொண்டு லாவத்
தொன்று தொட்டுள்ளநிலை நீங்காமை யால்வலிய
தோள்மல்லர் பலரை யேவத்
தோற்றத் தரண்டுவளை சின்னமொடு தாரையின்
துழநிசெவி கொள்ள வூதிக்
குன்றன்ன மேனிமேற் சவளஞ்சம் மட்டிகதை
கொண்டடி கொடுக்க வதனாற்
கும்பகர் ணன்றுயில் சுகமாகி வளர்வுறக்
கூடிடும் நிலைமை கண்டே. (சாய)

Koviloor Digital Library


சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

கண்டவ ரிளைத்தேக ராவணனெ ராயிரங்
கடங்கடரை யேவ வவர்கள்
கணவெஃகு லக்கையாற் கர்ணமூலத்தினிற்
கடுமையாய்த் தாக்க வதனல்
மண்டுதுயில் நீங்கி மீண்டுயிர்வந் தபோலாகி
வலியபே ருண்டி யுண்டு
வந்துகண் டிடராவ ணனையவனு நீயெனது
மாற்றலரை வென்று வெற்றி
கொண்டுவரு கென்றுபோர்க் கோலமது சூட்டியே
கூறி சதுரங்க சேனை
கொடுத்திடக் கண்டுபல புத்தியவ னுய்ந்திடக்
கூறியுமுளங் கொளாதால்
தண்டெடுத் துக்களரி நோக்கியவன் வருவதை
தாசரதி கண்டு மலையில்
தலைகால் கரந்தோன்றி வருவதென வருவதார்
சாற்று வீடணு வெனவுமே (௬௰௧)

எனதுமுன் ஞேனிரா வணனினே ரிளையவன்
இவனி னல்லுரை கொளாதால்
ஈண்டெய்தி ஞனென்று குணநலனும் வலிமையும்
எடுத்துரைக் கக்கேட்ட வண்ணல்
உனதுரை யவன்கேட்டு நம்மொடுங் கூடிநன்
றுறவெண்ணி விட்டு வருகென்று
உரைக்கவவ் வாறுசென் றுள்ளக் குறிப்பினை
யுணர்த்தவு மிணங்காத வன்மை
மனதுகண் டோதவும் போர்மூள ராக்கதரும்
வானரரு மெதிர்கொள் போரில்
மடிந்திராக் கதர்மிகவு மழியக் குரங்கின்மேல்
மாற்சரி யனுய்க்கும்ப கர்ணன்
தனதுகை யாலதை யள்ளிப் பிசைந்துபின்
தரையிட் டரைத்துப் புசித்து
சாந்தெனப் பூசிசிறு கொசுகெனத் தேய்த்தவன்
தன்னிக ரிலாது தனியே. (௬௰௨)

Koviloor Digital Library


தனித்தெதி ரிலாதுலவ வானரச் சேனையின்
தளபதி களௌவ் வொருவரும்
தகைந்துபெரு மலைவீசி வலியபோர் செயவதிற்
றளராமை கண்ட விளையோன்
குனித்தசிலை கொண்டநுமனின் றேளிவர்ந்தெதிர்
குறுகி யவனோ டெதிர்த்துக்
குலைகுலைந் தவனிரா யுதனுதல் கண்டகல்வு
கொண்ட போதிற்சுக் கிரீவன்
நனியிகல்வு கொண்டடெதிர வவனையங் கைக்குள்
நசுக்காது மூடி நகரை
நாடியே குகையில்கண் ணயரவுங் கைநெகிழ
நழுவியவன் நாசி காதும்
அறியாய மாயிழக்கப் பல்லினுற்கடித்
தடியோடு பேர்த்தெ டுக்க
அதுபோ திராமபா ணமும் வந்து வீழ்ந்துதவி
யாகமீண் டோடி வந்தே. (கூ௰ரு)

வந்ததசு ராங்ககா ணிக்கையென வண்ணவடி
வைத்தவன் வணங்கி நிற்க
மறுபடியு மமர்செயக் கும்பகர் ணன்குறுக
வவனுய்ய வினிய மொழிகள்
தந்தரு ளிராகவன் காட்டவுங் கொள்ளாத
தன்மையாற் போர்தொ டுத்துச்
சமரிரு வருஞ்செய்ய வதிலிரா வணனுடைய
தம்பியுடல் துண்ட தாகி
அந்தவொவ் வொருதுண்டு மமர்செய்ய மேன்மேலு
மதிக சரமாரி பெயலால்
அவனெந் திராமரிட மென்தலை யறுத்துநீ
ராழியிடை யிட்டு வெற்றி
சொந்தமாக் கிடுகவென் றம்பிவீ டணனையும்
சோராது காக்க வென்று
சொல்லவவ் வாருக்கி வீரரா கவன்வாகை
சூடுநிலை கொண்ட போதே. (கூ௰௬)

Koviloor Digital Library


அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

போதமழி துன்மார்க்கர் சொற்படி இராவணன்
போய்ச்சனகி முன்னர் தாழ்ந்து
பொலிவான நயமொழிகள் பலபேசி என்னைநீ
புல்லிமிக வாட்டு காம
வேதனை தவிர்த்திடுதி யென்னவுங் கற்பினொளி
வீசுதீ யனைய நங்கை
மிகவுள மழன்றுகிள் ளியதுரும் பெனவவனை
வீறுகெட நிந்தை செய்யக்
காதகர் களைக்கடைக் கண்ணின ளேக்கக்
கதங்கொண்ட ராவணன்முன்
கட்டுண்ட சனகனைவிட வவர்கள் சனகனும்
கண்கலுழ்ந் தெனது செல்வீ
ஏதமற ராவணே சுரனுக் கிணங்கியெனை
இரட்சிக்க வேண்டி னேனென்
றிதமொழியல் கேட்டசுரர் மாய்கையின் செயலிதென்
றெண்ணி மிகவுங் கொதித்தே. (௬௰௫)

கொதிகொண்ட வெம்பிரான் வாளியுன் னெஞ்சைக்
குதங்தெறிக வுனது தலைகள்
குலைகொள் பனங்காய்க ளென்னவறு பட்டுமண்
கூறகொள வுனது மைந்தன்
விதிதொலைந் திளையவர் சரத்தான் மடிந்திடுக
வெய்யைநீ யலற வதனுல்
விளம்புமிம் மங்கலச் சொற்கேட்டெ னுள்ளமது
மிகவுங் குளிர்ச்சி கொள்ள
அதிவிதம தானவுன் பொருளெலாம் வீடணர்க்
காகெனச் சொல்லு போழ்தில்
அங்ஙனே தூதுவர்கள் கும்பகர் ணன்பட்
டழிந்தான் களத்தி லென்ன
மதிகுலை குலைந்தழு தகன்றன னிராவணன்
மாதுநல் லாளுக் கரக்கர்
மாயவினை யுண்மையைத் திரிசடை யுரைத்தனள்
மகிழ்ந்தனள் சீதை யுளமே. (௬௰௬)

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

## அவதார சித்திப் படலம் (வேற்றிசைப்பா)

சீதையுள மானவிளை வெய்திடு மிராவணன்
திருமலையை வலம்வராமற்
றேவியுமை வெருவிடத் தலையினிற் றூக்கியாழ்
செமையா யழுத்த வாழ்ந்து
வேதையற மறையோதி யுய்ந்தசிவ வபராத
விளைவினுல் வாலி கார்த்த
வீரியார்ச் சுனனிவர்க ளிடமுமச் செயல்செய்து
வீறுகெட நண்பு கொண்டு
பேதைமதி தீர்ந்தவன் பத்தினி யிடத்துமப்
பிழைசெய்ய வறம்வெகுண்டு
பேராவியற்கையை யவன்குலங் கிளையெலாம்
பெறவளித் திட்ட சொல்வாம்
தீதையொழி யத்தர்பாற் பத்தர்பா லாத்தர்பால்
செய்தபிழை முக்காற் பொறுத்துஅத்
தீங்கினைக் கற்பினுள் பாற்செய்ய அறமழிவு
செய்து மகிழ்வுற்ற துளமே. (சாயஎ)

## அவதார சித்தி நிறைவுப் படலம்

உண்டுண்டுயர் தெய்வம்முயிர்க் குறுதித்துணை நிற்கத்
தொண்டுண்டவர்க் கைம்பூதமும் தொழும்புச் செயல்புரியக்
கொண்டுண்டெனு மனமுண்டறங் கூடுந்தவ மோங்க
விண்டுண்டறஞ் செயமாமதை விருப்பென்றிரு சான்றே.

Koviloor Digital Library


சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

உளமழிந் தின்னலுறி ராவணின் மைந்தனுன்
யுத்தகள மேகி வெற்றி
யுடன்வருக னென்னவவ் வதிகாய னெடுபொங்கும்
உததிபோற் படைகள் சூழ்ந்து
களரிநோக் கிடவதில் நராந்தகன் தேவாந்த
கன்ருரு கன்கால சங்கன்
காலன் மருந்தன்னெடு கும்பனு நிரும்பன்
கடுங்குலிசன் முச்சிரத்தோன்
தளராத வயமத்தன் மத்தனெடு மாலியுந்
தானைபடை யோடு கூடித்
தாக்கவெதிர் கொண்டெழுந் ததையிணை யவன்கண்டு
சமர்பொரு துமாறெ ழுந்தான்
அளவிலாப் போர்வீரர் மாண்டனர் இலக்குவன்
அம்பு மழைதனின் மருத்தன்
ஆனையன் காலசங்கன் காலன் மாலிகுலி
சனுமிவர் கள்பட்டு விழவே. (௬௰அ)

பட்டு வீழாதெஞ்சும் அதிகாயன் முடுகியெதிர்
படவிலக் குவனு மெதிரார்ப்
பரித்தங் கதன்ருேளி வர்ந்துபல பாணங்கள்
படவிட் டவன்ப டாதால்
விட்டனன் பிரமாத் திரத்தையதி லுடலுயிரும்
வேருக அங்க னின்றும்
மீண்டா னிலக்குவன் அநுமனெதிர் போர்செய்து
வீந்தனன் ருேவாந்தகன்
முட்டியெதிர் பொருதியங் கதனுல் நராந்தகன்
முடியவய மத்த னென்போன்
முரணியடல் நீலனுல் மாய்ந்தபின் மத்தனும்
முடிந்தனன் அநும னெதிராய்க்
கிட்டிமுடு கித்திரி சிராவொடு நிரும்பனுயிர்
கெட்டனன் கும்பனெடு சுக்
கிரீவனு மெதிர்த்ததிற் கும்பனுயிர் வீந்தனன்
கேட்டது புலம்ப வொலியே. (௬௰௯)

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்றுக குருவாழ்க குருவே துணை

ஒலியே தெனச்சிந்தை நீணையுமுன் னேயொற்ற
ரோடிலங் கேசற் குணர்த்த
ஓலென் றிராவணு தியரலற விந்திரசித்
தோடோடி வந்து கேட்டுச்
சலித்துப் புலம்பிநான் சென்றிலக் குவணனைச்
சாய்த்தலது மீளகில்லேன்
சத்திய மெனச்சொல்லி நால்வகை சேனைகடல்
தரைகரை புரண்ட தென்னக்
கலித்தமர்க் களநடு நடுங்கவரு கின்றதைக்
கண்டிலக் குவனு மெதிருங்
காலையிற் றுணைக ளிரண்டுமெதிர் பொருதிக்
கலந்ததிற் றனது தானை
நலிந்தழிந் ததுகண்டு வாயுமைந் தன்றேளில்
நண்ணி லக்குவண னெதிர்கொள்
நால்வகைச் சேனையற விந்திரசித் தனுமிரள
நனியம்பு மழைபொ ழியவே. (எம)

பொழிபடைக் கலமேவி இந்திரசித் தும்பெரும்
போர்செய் தலக்க னுற்றுப்
பொறிகலங்கிப்பலது மெண்ணியே வஞ்சகப்
போர்செய்ய வாங்க ணின்றும்
இழிந்துவா னூடேகி யுருவங் கரந்திட
லிலக்குவண னறியாது தோற்றே
டினுனென் றுடம்புகளை யாறத் தொடங்கவும்
இராவணியி னின்று நஞ்சு
வழிகின்ற நாகபா சக்கணையை விடவிடம்
மண்டுதீ எரிய வெங்கும்
வந்திலக் குவணனைக் கட்டவு மியாதொன்று
மறியாது பதறி யயர
ஒழிந்தவனை வரையுமே நாகபா சம்பிணிப்
புள்ளாக்க வதனி னநுமா
னெருவனே தன்னுணர்வு குன்று திருந்தனன்
ஒளிந்தமா யாவி யவனே. (எமக)

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

அவமாயை யான்மறைந் தந்தரந் தனினின்றும்
அம்புமழை மாரி தூர்த்தாங்
கணைவரையு மிகவொழுகு குருதிவெள் ளத்தினுள்
ளாழ்த்திமீண் டேயி லங்கைக்
குவகையுட னெய்திரா வணனிடம் செய்தியை
யுரைத்துடற் சோர்வை மாற்ற
உறையுளின் மணிச்சேக்கை யுற்றனன் அண்ணல்வந்
துற்றவி தறிந்து சோர்ந்து
எவரிந்த வாளியை யீந்தார்க ளோவவர்கள்
எய்தியிதை மாற்ற வேண்டும்
இல்லையே லகிலமெரி யாலழிய வாளியா
லிப்பொழு தழிப்ப னென்ற
தவராஜ ராமனற மோர்ந்து சினமாறவச்
சமையத்து வான வெளியிற்
றண்ணென்ற பூங்காற்று மென்மையா யமிதமொடு
தழுவியுயிர் தழைய வரவே. (எ௦உ)

உயிர்தழைய வருமமிர்க் காற்றுவீ சுஞ்சிறகொ
டுயர்வானில் வட்ட மிட்டாங்
குலவிவரு கருடனைக் கண்டதும் இற்றற்
றெழுந்த தவன்நாக பாசம்
செயிரீர்ந் துடற்றழும் பதுமாறி யங்கஞ்
சிதைந்தன வுமொன்று கூடித்
தெளிந்து மீண்டுயிர்வந் தெழுந்தெழு பதுவெளஞ்
சேனையு மிவற்றை நோக்கிப்
பயிர்தழைய வருமேக மென்னநான் செய்தவப்
பயனாக விங்கு வந்த
பகவனீ ராரென்ன வன்புமிக் கூர்ந்துபல
பலவாறு சொல்லி யேத்தும்
தயிரியச் செயவீர விசயரா கவனிடம்
தனது தொடர் பழமைமிக்க
தாகுமவ் வுண்மை பின்னுலறிய லாமென்று
சாற்றிவா னூடு செலவே. (எ௦௩)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

செலலான செய்தியினை வாயின வெலாந்தூதர்
தெரிவிக்க லங்கே சனுக்குச்
சினமுண்ட போதுவேள் விப்பகைஞன் மாலிவச்
சிரதந்த னிரவி பகைஞன்
அலகையோன் ஆதியைம் படையதிபர் போர்க்கெழ
வரக்கர் வானர ரெதிர்த்தாங்
கழியவது கண்டவநு மான்புகைக் கண்ணனை
அங்கதன் மாபாரி சோனை
வலநீலன் மாலியைப் பனசன் பசாசனை
வானரர்கள் வேந்த னிரவி
மருவலனை இடபன்வச் சிரதந்தனையு மடிய
வதைசெய்ய லக்கு வணனால்
உலந்துவேள் விப்பகைஞ னுஞ்செலக் கண்டதூ
துவரோடி நிருதர் கோனுக்
குரைக்கக் கொதித்துள்ளம் அழலமக ரக்கண்ணன்
யுத்தசன் னத்த முற்றே. (எ௰௪)

உற்றவ ரெலாஞ் சென்றவழியின்வந்த மராற்ற
லுறவிரா கவனு நேரிட்
டொழிக்க நளனாற்குருதி நயனனும் பனசனால்
உம்பலரி யோனு மாள
வொற்றர்கண் டோடிரா வணனுக் குரைக்கவு
முரைத்தவிதை யிந்திரசித்திற்
கோதரா வணனதைக் கேட்டவவ னாற்சேனை
யுததியென வணுக வந்து
பற்றலர்மு னார்ப்பொலி எழுப்பக் குரங்குப்
பதாதிகள் பயந்தொளிக்கப்
பார்த்தநும னங்கதன் றோள்களிற் கோதண்ட
பாணியு மிலக்கு வணனும்
உற்றிராக் கதர்சேனை யழியவம் பேவிவிண்
ணுதவவிந் திரசித்த னெற்றை
யொருவனவ னாகத் தனிக்கவவ னேடிலக்
குவணன் பெரும்போர் புரிந்தே. (எ௰௫)

Koviloor Digital Library

சிவமயம்
அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

புரியாத நிலையிந்த்ர சித்தெய்த வாக்கவப்
பொய்யனுரு வங்க ரந்து
போய்விண்ணின் மறையலக் குவணனுன் முகன்வாளி
போக்கமுற் படவு மண்ணல்
சரியல்ல வெனவமைவு கொளவிந்த்ர சித்தனழி
சாட்டியஞ் செயவி லங்கை
தனிலேக விவர்களுஞ் செருவொழிய விறையவன்
தம்பிதனி யாக விலகிப்
பிரியவது காலையி விராவணி இராவணன்
பேசிக் கலந்து மறைவாய்ப்
பிரமாத் திரம்போக்கி வெற்றிகொள வெண்ணிமுன்
பேகென மகோத ரற்குக்
கரியராக் கதர்படை யநேகங் கொடுத்திடக்
களமுற் றுடன்றி லாத்த
காலையி லகம்பனையு மாருதி வதைக்கக்
கலங்கி யுருவங் கரந்தே. (எ௯௬)

கரந்துபோய் அணடவெளி தனினின்று மிகுமாயை
காட்டிக் கடும்போ ரியற்றுங்
காலிந்த்ர சித்தனு மறைந்து பிரமாத்திரக்
கணையை லக்குவணன் மீதிற்
றுரந்திடப் பலகோடி யாய்வந்து மொய்த்துச்
சுமித்திரையன் மீதி லடரத்
தோன்றுணர் வொடுங்கியவன் வீழநதன் அநுமனுஞ்
சோர்ந்துணர் வழிந்து வீழ்ந்தான்
பரந்தரண களமீது வானரப் படையெலாம்
பட்டுவீழ்ந் தனவ ரக்கன்
பார்த்துப் பெரும்பீடை விட்டதென் றெக்களிப்
பாய்ப்போ யிலங்கை புக்கான்
சரந்துரந் துற்றவிதை வந்துபார்த் திறையோன்
தளர்ந்து மூர்ச்சித்து வீழச்
சாற்றுமிச் செய்தியை யிராவணன் கேட்டுத்
தருக்கி வஞ்சக நினைந்தே. (எ௯௭)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

நினைவுகெட் டமராற்றி எளியமா னிடருற்ற
நிலையறிதி யென்று மாபோர்
நிகழ்ந்துள களங்காண வாக்குசா னகியையவள்
நேரெதிர் படாத வாறு
கனைகடற் புகவசுரர் தம்பிணக் குவையைக்
கழித்திடுக வென்ற ரக்கன்
கட்டளை பிறப்பிக்க வவ்வாறு செய்தே
களங்காண்க வென்று சனகி
தனைவிமா னத்தினமீ தேற்றியே காட்டத்
தவித்தலறு போதி லுண்மை
சானகிக் குத்திரி சடையவ ளுரைத்திடத்
தளர்வொழிந் தனள கன்று
வினையமறி யாதுணவி ஞெடு மீண்டு களமுற்று
வீடணனி தோர்ந்த றிந்து
மேவியனு மனையவன் கனைநீக்கி யுடனுக
வெய்திடச் சாம்ப வனையே. (எ௰அ)

சாம்பவ னுணர்ந்துற்ற தோர்ந்தைந்து மாமலைகள்
தாண்டிடக் காண நிற்ப
தாகிய மருந்துவாழ் மலையின் நாற்கரணியுள
தன்மை யுரைசெய்து கொணர
வாம்பண்பு கூறவநு மான்பேருருக் கொண்டு
வானுறநிமிர்ந்து கயிலை
மலைவாமு மிறைவனே டைம்பெருந் தலைவர்வாழ்
வாம்நிலை யொடட்ட திக்கை
யோம்புபா லகர்கனிலையுங்கண்டு ககனவழி
யுற்றுவெகு தூரங் கடந்தே
உத்தரக் குருவத்தை யெய்திரவி யங்கொளிர
யோசித்த பின்னர் தெளிவாய்த்
தாம்பார்க்க வந்தகர ணியையநோக்க மறையவச்
சஞ்சீவி மலையைப் பிடுங்கித்
தாங்கியொரு கையினல் வான்வெளியை வழிகொண்டு
தாவி லங்கா புரிக்கே. (எ௰கூ)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

இலங்கா புரிக்குவரு முன்னர்சஞ் சீவியி
னெழுந்துலவு மாருதத்தா
லிரணகள மீதுற்ற வானரர் களேவரம
தெல்லா முயிர்ப்பு வந்தும்
உலந்தழிந் தனவாய தாதுக்க ளெல்லாமு
முண்டாய் நரம்பெ லும்பும்
ஒன்றுகூடிச் சிதை வானவங் கங்களும்
உருவாகி முன்போன் றெழும்ப
நீலமுரு தண்டவெளி நின்றவம் மலையைமுன்
னிலைசேர வாக்கி யநுமான்
நேர்மையோ லைப்பணிய வுஞ்சிரஞ் சீவியாம்
நித்தியத் துவமளித்தேன்
தலமிசை யுனக்கென்று நல்லாசி கூறினன்
சதுர்முகன் கலையு மிற்று
சகலரு மெழுந்ததை இராவண னிடந்தூதர்
சாற்றினு ரோடி வந்தே. (அஎ)

வந்துரைத் ததுகேட்ட விந்திரசித் தன்வஞ்ச
மாய்மகஞ் செயநி னைந்தே
மாயையா லநுமன்முன் சீதை சிரந்துணிய
வாளா யுதங்கொண்டு வீசி
இந்தமட்டும் நின்று விடவில யயோத்திக்கும்
ஏகியெல் லோரையு மழிப்பே
னெனவிமா னத்தேறி விரைவபோற் பொய்செய்
திலங்கையு ணிருஞ்ச வோமத்
தந்தரஞ்செய வேக வறியாத மாருதியு
மலறித் துடித்தே யுரைக்க
வதுகேட்டு மனிதவுரு வானமா லவனுமற்
றனைவோரு மழுதரற்றச்
சந்தேக முற்ற வீடணனுறுதல் சொலிச்
சஞ்சரி கமாய்ச்சஞ் சரித்துச்
சானகியினலமிந்த்ர சித்தன் நிகும்பலைசெய்
தன்மையுங் கண்டு சொலவே. (அஎக)

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

சொலல்கேட் டுளந்தெளிந் தனுசர்க் ககத்தியன்
சொல்விஞ்சை வாளி வில்லுந்
தூணியு மளித்தின்று வெற்றியுடன் வருகெனச்
சுபமோது வித் தனுப்ப
நிலவறையின் வேள்வியை யளித்திலக் குவனநும
னீள்புய மிவர்ந்த டும்போர்
நெடிதாற்றி யிந்த்ரசித் தன்படைத் தளமெலாம்
நிர்மூல மாக்க மிகவெய்த்
தலந்துரு மறைந்துவிண் ணின்றிலங்கையி னெய்தி
யழியாத தேரோடு மீண்டும்
அமரதிகனுய்ப் பொருத வீடணனு முளவுசொல
வவ்வா றவன் பெருந்தேர்
பலவாய்ப் பிரிந்து வீழ்ந்தழியவா ளியைவிடப்
பாதகனு மேற்சென் றுநின்று
பாணமழை வருடித்து வாரைப் படையெலாம்
பட்டழிந்திடப் பொருதவே. (அமஉ)

பொருதுமவன் வாளிவரு வழிகுறி பிடித்தம்பு
போக்கிவிற் கொண்ட கையைப்
பூமிமிசை யற்றுவிழ வாக்கியு மறைந்தவன்
போர்செய்ய முயலல் கண்டாங்
கொருபிறை முகக்கணையை யபிமந்திரித்துவிட
வுயிருண் டுடம்பு தலையும்
ஒன்றிரண் டாகவிண் ணின்றுவிழ வாக்கவது
வுயரந் தரத்தி னின்றுஞ்
செருக்களந் தன்னின்மும் மூர்த்தியுந் தோன்றினர்
சேர்ந்துயிர் பொருந்திக் குரங்குச்
சேனையெல் லாமெழுந் தார்த்ததிந் திரசித்து
சிரமங் கதன்கை கொண்டு
வருகவும் ஆஞ்சனே யன்றே ளிவர்ந்துடன்
வருமிலக்குவண னண்ணல்
மலரடி யினிற்றுழ வங்கதனு முடியையடி
வைத்துப் பணிந்து தொழவே. (அமந)

Koviloor Digital Library


சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

தொழற்குரிய நீதியோ னிவ்வெற்றி வீடணன
துறவால் விளைந்த தென்று
சொல்லிமகிழ் வுற்று னிலங்கைவேந் துக்கிதைத்
தூதுவர்கள் போயு ரைத்தே
யழலிரா வணனுமிக வழுதிரண களமேவி
யவன்முண் டமுங்கரங் கொண்
டழுதிலங் கைக்கே கமூலபல வெள்ளமோ
ராயிரம் எழுந்தார்ப் பரித்து
முழங்குகட லெனவந்த செய்தியை யுரைக்ககவிம்
மூலபல மொன்று யிரண்டு
மூரிவில் மனிதரை முடிக்கவா னரரையான்
முடிவிப்ப னென்றேக மாற்றம்
வழங்கவும் போர்முர சறைந்தகீ ழுலகேழு
வரைகளேழ் தீவொரேழு
மற்றெங்கு மெங்குமுள நெடிராட் சதர்குழாம்
மண்டித் ததும்பி வரவே. (அஙச)

மண்டித் ததும்பியுயர் மலைகால் கரங்கொண்டு
வருவதென வருதல் கண்ட
வானரர் குழாமெலா நடுநடுக் குற்றுள
மருண்டு நாற்றிசையு மோட்டங்
கொண்டதநு மானங்க தன்சுக் கிரீவனொடு
கூடி வீடணனு நிற்கக்
கொடுமையுள மூலபல வியல்வீ டணன்சொலக்
கூர்ந்திராக வனறிந்தான்
சண்டையிட வேண்டுமது இல்லையென் றேட்டந்
தவிர்க்க வங்கதன் முனைந்து
தடுக்க வவ்வானரச் சேனைநிலை பெறுமாறு
தம்பியு டனைந்து பேர்கள்
தண்டவைத் தொருவனே மூலபல மழியநற்
றனுவேந்தி யெதிர்கொள் போதே
தாகுமோ வென்றண்ட ரஞ்சவவ ரச்சந்
தவிர்த்தஞ் சலீரென் றமைத்தே. (அஙரு)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

அமைவின்றி யெழுமூல பலவெள்ள மாயிரம்
அத்தனையு மொன்ருக வின்றைக்
அழியவிதி வைத்திரா மர்க்குவலி யீந்தமென்
றண்ணல்முக் கண்ண னெம்மான்
இமையவர்க் குரைசெய்ய ரொவ்வொநவ ரொவ்வொந
விராவணர்க் கொத்த வலிமை
இயையொ ராயிரவெள்ள மொன்ரு யடர்ந்தட
விராமரொ டெதிர்த் தெழுந்த
சமையத்தி லெங்குந் திரிந்துசா ரிகைதந்து
சரமாரி யடர வேவித்
தப்பியோ டாதுசர மதில்செய்து இராமனொரு
தனிமனித னல்ல வந்தோ
வெமையுமை யியாவரையு மெதிரெதி ருடன்றுபொரு
தெத்தனை யனந்த ராமன்
இவனென் றிராவணனின் மூலபல முள்ளடர்ந்
தெல்லாம் அழிந்து படவே. (அமசா)

எல்லா மழிந்துபட வாடுங் கவந்தமா
யிரமா யிரங்கோடி யாட
இனிதொருக் காலசைய வில்லின்மணி கணகணென
ஏழரைக் கடிகை யாட
வல்லமை யொடும்பெரும் போராற்றி யனைவரையும்
மடிவித்து நின்ற காலை
வானவர் வியந்தனரொ ரிருமுகூர்த் தத்தினில்
மாபெரும் வெற்றி கண்ட
வில்லவ னிராவணனை நாடிவர வவனிலைய
வீரனொடு போரியற்ற
வெற்றிகொள வுளவுசொலும் வீடணனை ராவணன்
வெகுண்டு வேலேவு காலை
நில்லென விலக்குவன் றன்மார்பில் வேலேற்று
நிற்கவூ டுருவி யோடும்
நிகழ்வால் விபீடண னிரங்கியழ ராவண
னிலங்கா புரிக்க ணுறவே. (அமள)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

கண்ணுற விளைந்தநிலை தீர்க்கமுன் போலநாற்
கரணிவாழ் மலையை யீண்டு
கடிதுகொணர் கென்றுசாம் புவன நு மனுக்குவழி
காட்ட வவ்வாறு செய்யத்
திண்மையொ டிலக்குவன் சஞ்சீவி யுலவையாற்
றெளிவுற் றுயிர்த் தெழுந்தான்
செய்தியிதை யிறைவர்க் கெலோருமீண் டுரைசெயச்
சிந்தை மிகவுங் களித்தான்
நண்ணிரா வணனிடம் தூதுவரிதைச் சொல்ல
நறுக்கென்று நெஞ்சங் கனித்தான்
நாற்றிசை யடர்ந்தெழுஞ் சேனைப் பெருக்கமொடு
நாடியெண் டிசையு மேல்கீழ்
அண்டமெங் குஞ்செலுமி ரதமூர்ந்து மிகவலிய
வாயுதக் குவியல் தொடர
அடல்செய்ய ராவணன் வரவின்று போர்முடிவ
தாகுமென் றமரருக்கே. (௮௰௮)

அமரரிந் திரர்பிரம ரரியவர்க் கரியனும்
அரனுரைத் தருளி யிதுபோ
தாகவஞ் செலவிராமர்க் கிந்திரன்றே
ரனுப்பென வனுப்ப வதுபோய்ச்
சமரபூ மியிலுற வயிர்ப்புற விராமனச்
சங்கையற வேத மோது
தன்மையுள பரிபூண்ட தைம்பூத மதின்வலிய
தாயதகி லாண்ட மெல்லாம்
சுமரவிரி வுறுதன்மை யுடையரத மூர்ந்தமர்
தொடங்க வொருகணையிலாவி
துறந்தான் மகோதர னிராவண னடர்ந்துமேற்
றூவு சரமாரி தீர்த்துத்
தமராம மூர்த்திகோ டாகோடி சரம்விடத்
தரையிற் றரிக்க முடியா
தாகாய மீதிரத மோடேற வப்படி
யவன்பின் றொடர்ந்து சென்றே. (௮௰௯)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

சென்றவனெடுங்கடும் போராற்ற வவனேழு
தீவேழு மலைகளேழு
தெண்டிரைக் கடலண்ட பித்திகையு நின்றுகணை
சிந்தவு மறுத்த றுத்து
நின்றிட வரக்கனு மிடிக்கொடி யறுத்தன
னிராம னுமறுத் தெறிந்தா
னிரா வணன் கொடியினைகருடனே கொடியா
இராமனது தேரி னின்றான்
அன்றுதெய் வப்படைக் கலமேவி யேவியே
யயர்வுற் றரக்க னிற்க
அதிகவலி பெற்றிரா கவனுக்க மெய்திநின்
றுங்கவன் றலைய றுந்து
பொன்றிடப் பிறைமுகக் கணையேவ வதுசிரம்
போக்கிட வறுக்க மீண்டும்
போனது முளைக்கவு மறுத்தறுத் துப்போடப்
போடவு முளைத்து வரவே. (கூ௯)

முளைத்துவரு சிரமிற்று விழவலிய வாலிபல
முடுகிவிட மண்ணு மலையு
முததியெண் டிசைகளொடு நோக்குமிட மெங்கெங்கு
முடிசி தறிவிழ வுடம்பு
தொளைபடப் பலவலிய கணையேவி யவனதிற்
சோராமை கண்டு பிரமன்
சுடர்வடிக் கணையேவ வகிலமு நடுங்கவத்
தோன்ற லுருவோடு வந்து
களைந்துயிரை யுண்டுமார் பூடுருவி யோடதச
கண்டனும் பிணம தாய்ப்போர்க்
களம்வீழச் செயராம நிலமெய்தி யமரர்தேர்
ககனத்தி லேவ விட்டாங்
கிளையவன் பக்கலுற வெல்லோரு மார்த்தன
ரிராவணன் றேவிமார்கள்
இடியேறு கொண்டபோற் கேட்டுயிரை விட்டார்கள்
இந்நிலைமை யான கண்டே. (கூ௰க)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

கண்டவீ டணனுளம் மிகவெம்பி யிறுதிக்
கடன்களா னவைமுடித்துக்
கார்வண் ணனைப்பணிய வாறுதல் மொழிந்துமிகு
கருணையொ டிலக்கு வணவிம்
மண்டலம தாளமுறை யேவீடணற்குமணி
மகுடமது சூட்டி விரைவின்
வருகென வனுப்ப வவ்வாறுசெய மாருதியை
மாதுநல் லாளுக் கிதெல்லாம்
விண்டுவரு கெனவேவ வதுகேட்ட சீதையுளம்
மிகவும் குளிர்ந்திருந்தாள்
வீடணர்க் கண்ணலுரை செய்தபடி யுற்றன
விளம்பி யெழிலோ டழைத்துக்
கொண்டுவர வவளுளஞ் சுடுமாறு நிந்தனைகள்
கூற வயிரா யிராமன்
கோதையினை யவன்வளர் நெருப்பினி லகம்புறம்
குளிரக் குளித்து வரவே. (கூ௰௨)

வரலான சுசிகரப் புனிதமிகு சீதைபால்
மனமகிழ்வு காட்ட ராமன்
வானின்று முத்தேவ ரெதிர்வந்து வாழ்த்துரை
வழங்கியெமை யொப்ப தான
திரமுளோய் நீயெம்மின் வேறில்லை யென்றவுரை
செப்பினர்கள் தாதையான
தெசரதனு முன்னின்று நல்லாசி சொலவவன்
றிருவடி வணங்கி நெஞ்சிற்
கரங்கொண் டொறுத்தநல் லாளையுஞ் சேயையும்
கனிவொ டென்றுய் தம்பியாகக்
கடவாது தரவேண்டு மென்றவர மதுகொண்டு
ககனுதி யோர்க ளருளாற்
குரங்கின மெலாமீண்டு முயிர்பெற் றெழுந்தாங்கு
கூடிக் குதூக லித்துக்
குதிகொள்ளல் கண்டுள்ள மிகமகிழ்வு கொண்டனன்
கோசலை மணிக்கொழுந்தே. (கூ௰௩)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

மணிக்கொழுந் தனையானை வானவர்கள் நோக்கிநீ
வனவாச மாக வந்த
வாண்டுபதி னான்குமின் றேடுநீறை வாயின
வடுத்தின் றயோத்தியேகும்
பணியை மேற்கொண்டிடுதி யில்லையே லெதிர்பார்த்த
பரதனெரி மூழ்க வுள்ளான்
பகர்ந்தமை என்னவிரை வாய்ப்பறந் தேகுபுட்
பகவி மானத் தின்முந்நூல்
அணிவோர்க ளாகவா னரருருக் கொண்டேற
வழகியொ டிராம னேறி
ஆகாய வீதியி லிலங்கையதை வலமாகி
யதிலுள்ள காட்சி யெல்லாங்
குணித்துரைத் தெதிர்தோன்றும் சுணைபுற் கிடக்கையும்
குடமுனி மலைம தங்கர்
குவடதுங் காட்டிக்கீழ் குந்துமலை யீதெனக்
கூறவு மிறங்கி யாங்கே. (கூ௨௪)

ஆங்குறையும் வானரப் பெண்களை யெலாமுட
னழைத்தேக வென்விருப்ப
மாமெனச் சீதையுரை செய்யவவ் வாறுக
வனைவரை யுமேற்றி வானிற்
போங்காற் பரத்தவச முனிவரைக் கண்டங்கு
புக்கிப் பணிந்து நிற்கப்
போகலாம் ஈண்டிருந் தெனவேண்ட விசையவப்
புங்கவன் றேவ போகப்
பாங்கமைய வாகுதிசெய் தாக்கவா னரரேழு
பதுவெள் ளமுங் களித்துஅப்
பயனுகர அதுபோழ்து விரைவினிற் பரதனைப்
பார்த்து நம்வரவு சொல்லி
ஓங்கழலை யணைவித்து விரைக வடையாளமாக
யுடனிந்த மோதி ரத்தி
னேடேக வென்றநுமனுக்கு மீசைபுரிராம
னுரைசெய் தனுப்பி விடவே. (கூ௨௫)

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

விடவேரு டம்பெனச் செல்லநுமன் வழியிலிவ்
விவரமறி வித்துக் குகற்கு
மீண்டயோத் திக்கேகு வேளையண் ணலைமிகவு
மெதிர்பார்த்த பரதன் வீழ்ந்து
படவெரி வளர்த்துவல மாகவவ் வேளையிற்
பாய்ந்திதோ விறைவன் வந்தான்
பகருமவ் வடையாள மோதிர மீதோவென்று
பார்க்கக் கொடுத்துச் செழித்தே
அடரெரியை யணைவிக்க மகிழ்வு கூர்ந்தெல்லோரும்
அந்தணப் பெரியிராரோ
வாமெனவவ் வுருமாறி யுண்மைக் குரங்குரு
வமைந்து வான்முட்ட நிற்குங்
கடந்தவுரு வமைகென்று வேண்ட வமைவாகவக்
காலையி லெலோருமெதிர் போய்க்
கண்டழைத் துடன்வரச் சுற்றமும் நகரிலுறை
கனசனத் திரளும் திரண்டே. (சுஎ௯கூ)

திரண்டறு பதாயிரம் அக்ரோணி சேனையும்
சேர்ந்துவர வநுமன் முன்போய்ச்
சேனுயர் விமானத்தில் வருமண் ணலார்க்குரை
செயவங் ஙணே யிறங்கி
வரநின்ற தம்பிதாய் குருசுற்ற மொக்கலொடு
மனமகிழ்ந் தனைவர் களையும்
வானவூர் தியிலேற வைத்தயோத் திப்பதியின்
வந்துநந் திக்க ராமம்
பரதனே டேகிசடை முடிமாற்றி யெழின்மணிப்
பணிபூண்டு தேரினேறிப்
பதியெய்த நகரில்வாழ் பெருமக் களனைவரும்
பார்த்தும னமகிழ்வு கூற
அரண்மனை புகுந்தளவி லனைவருங் கண்கொளா
வதியெழி வினிற்றிலைத்தார்
யாவருங் களிகொள்ள ராமர்க்கு முடிசூட்ட
வாவன வசிட்டர் செயவே. (சுஎ௯எ)

Koviloor Digital Library
சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

செயராம மூர்த்திதிரு முடிபுனையு மங்கலந்
தெரிசிக்க வகில புவனத்
தெல்லோரும் வந்தார்கள் அநுமனெண் டிக்கிலுள
தீர்த்தமெல் லாமுங் கொணர்ந்தான்
மயனைய னுரைத்தபடி முடிமஞ் சனச்சாலை
மண்டபத் தைச்ச மைத்தான்
மண்டபத் துள்ளுயர் பளிங்கு மாடத்தினிடை
வைத்தபொற் பீட மதன்மேல்
வயங்கெழிற் பலகையாற் வச்சிரக் கால்சேர்த்த
மாணிக்க மதைய மைத்தார்
வசிட்டகுரு வுரைசெய்த நாளினல் லோரையில்
மவுலி புனைமஞ் சனந்தான்
இயற்றிடப் பெறுதற் கிராமருஞ் சீதையு
மியோகமும் போகமும் போல்
எழுந்தருளி வைகமங் கலசங்க மறைபல்
லியந்துடி முழக்க முறவே. (௬௰௮)

முழக்கமுறு மந்தரத் துந்துபி யொடுந்தேவர்
முருகு விரிமலர் கடூவ
முடிசூடு மங்கலத் திருமஞ் சனஞ்செய்யன்
முறைமுறைப் படிநடத்த
அழகன் அரியணையை யநுமன் ருங்க வுடைவாளை
அங்கதன் கையினேந்த
அதிசுமித்திரை சேய ரிருவர்வெண் சாமரை
யசைத்திடக் கைகை குமரன்
நிழற்றுவெண் கொற்றக் குடைகவித் துடனிற்க
நகரில் வேளாள ரேந்தி
நீட்டுமணி மவுலியை வசிட்டமா முனிவர்தன்
னிருகரத் தாலெ டுத்துப்
பழகுமுறை மொழியினெ டிராமர் கணிந்திடப்
பக்கலிற் றிருவி ளங்கப்
பார்த்தவ ரியாவரும் கண்பெற்ற தாலாய
பயனெய்தி யுய்வு பெறவே. (௬௰௯)

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

உய்வுபெற வகைசெயும் வசிட்டருரை வழுவாம
லுடனி லையமு வருக்கும்
ஓங்குமணி முடிகவித் திளவர செனும்பட்ட
முவகையொ டளிக்க மற்றை
வையகவிரா சரவரவ ரவர்கள் பதியெய்தி
மனமகிழ்வு பெற்று வாழ்ந்தார்
மாதமும் மாரிபெய நால்வருண மக்களும்
மரபு வழுவாது வாழச்
செய்துசெங் கோலோச்சி யயோத்தி ராமனெழில்
திகழமுன் பிருவர் நன்மை
சேரவைத் ததினேற்ற பாதகங் கழிவுறத்
தெற்கினவ் வெல்லை யேகித்
தையலொடு சிவபூசை செய்தந்த மூர்த்திதீர்த்
தந்தலந் தனது பெயராற்
சகதலத் தென்றென்று நின்றுபவ நீக்கந்
தரச் செய்துயர்ந் தானரோ. (௱)

**இரத்தினச் சுருக்க இராமாயணம் உத்தர காண்டம் நிறைவுபெற்றது**

KOVILOOR ANDAVAR ... KOVIL
44354

Koviloor Digital Library



சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

## வாழ்த்து

பச்சை மேனியெழின் மிக்கபெண் கொடிப்
பாவை யாளையுட னுகவோர்
பாகம்வைத்தவர னுமையினுமமொரு
பாங்குபெற்றதாற் றேன்றிநல்
இச்சை யானவை யெலாந் தரற்குரிய
இராம என்ற திருநாமமே
இசையு மாலினவ தார புனிதமிகு
மிரவி குலோத்த மனிசாசரர்
மிச்சை தீர்ப்பனென தண்ட காரணிய
மெய்த்தவர் கபய மீந்தவன்
வீறுகொண்ட புகழோது வோர்தமது
வெம்பகைப்பிணி தவிர்க்கலாம்
நிச்சயப் பொருள் விளங்கு மாத்திகநன்
நெறிவளர்ந் திடு மிகம்பரம்
நேர்மையாய்ப் பெறுவதற்கு வேண்டியவை
நிலைமை யாயமையுமுற்றுமே.

# அற்புத இராமாயணம்

### காப்பு

**கற்பக வேழக் கழல்பணிந் தோதுவாம்**
**அற்புத ராமா யணம்.**

தேவ ரிருடிய ரிண்ணல் தவிர்க்கத் தெசரதர்க்கு
மேவிய பிள்ளைக் கலிதீர்த்த ராமன் வியனடையில்
ஓவிய மாங்கல் லகல்லியை பாகியுரு வெடுத்துச்
சேவித்து நிற்க வவன்சீ ரடிதீர்க்கை செய்ததுவே. (க)

செய்தவ னேடுசனக னவைபோய்த் திருமணஞ்சீ
ரெய்த மலைவில் லதனை மலையா தெடுத்துமலை
வெய்த வளைத்தவன் பின்னும் பரசேந்திராமனருள்
தெய்வச் சிலையை வளைக்கத் தவம்வந்து சேர்ந்ததுவே. (உ)

Koviloor Digital Library

தவம்வந்து சேரு மிராமன் விராதன் மேற்றுள் கொடுந்தப்
பவர்க்க மறுதீர்க்கை யாயின கைத்தலம் பட்டழுந்தக்
கவந்தன் பயங்கரக் கோரவுரு தீர்க்கை கண்டுயர்ந்தான்
உவந்திடு வோர்கள் தெரிசனமாம் நலமோதுவமே. (௩)

ஓதுங் கலைகள் வியர்க ரணந்தே ருமாருத்திக்கு
தீது தருங்கடுவன்பகை நீள்வலி தீர்மருந்தும்
போதங் தருமட்ட மாசித்தி வந்து பொருந்தருள்சேர்
சாதன முமாயமைந்த திராம தரிசனமே. (௪)

தரிசனங் கண்டோ ரனைவர்க்குந் தீர்க்க தரிசனமாய்த்
தெரியும்படி தன்வலிய நெடிய சிலைவளைவித்
தரியிரா மன்விடு மோர்வாளி யேழும ராமரமும்
சரியத் தொளைத்தூ டுருவிமீண் டாகவஞ் சார்ந்ததுவே. (௫)

சார்ந்த நெடுங்கடல் மீதிலணைகட்டித் தானையெலாஞ்
சேர்ந்திலங் காபுரிக்கேக வருணனை திரைகொடெற்றும்
ஆர்கலிச் சீற்ற மடக்கி யலையற் றமையுநலங்
கூர்ந்த பணிசெய்த தின்று முளதிக் குவலயத்தே. (௬)

குவலயத் தொவ்வோ ரிராவண னுமெனக் கூடிவரு
மவராயிர வெள்ளமூல பலச்சேனை யஃதனைத்துந்
துவம்சம் படவொரு விற்கொண்டு வாளிதூர்த்துச் சுழலல்
அவர்கட் அனந்த இராமனுய் தோன்ற வழிந்ததுவே. (௭)

அழியாத் திருவின் சிலீமுக நோக்கி யதிற்கடிந்த
இழிபுள் ளுருவா மசுரன்மேல் வாளியாயேவுதுரும்
பொழிக்கத் தொடரப் புகலிடமின்றி யுடன்பணிய
விழியொன்றுய்க் காகங்க ளின்று மணுகாவிலங்க லுண்டே. (௮)

உண்டாய தற்புதஞ் சேருமிராமருக் கூழுணர்த்த
விண்டுரு வாய்த்தன் பூதாகார மானவிரிபுனலில்
அண்டிய சூழலனைத் தையுங்கொண்டாங் கபவருக்கங்
கொண்டனன் அந்நீர்த் திருநாளு முண்டிக் குவலயத்தே. (௯)

குவலயம் வாழ்ந்திட வாழ்ந்தான் வினைகுறிக் கோளடையும்
விவர முணர்த்து மிதிகா சதிபன் விதேகிபதி
தவராச னற்புத ராமாயணமாஞ் சரிதையிதை
யுவந்தோது வார்களும் அற்புத வாழ்வுபெற்றுரேங்கு வரே.(௰)

**அற்புத இராமாயணம் நிறைவு பெற்றது**

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

எம் ஞானத் தெளிவு குரு சிறுவயது முதல் இயம நியம நெறியில் நின்றதனுல் திருவருள் கூட்டுவிக்க வாசிக்கலை பயின்று அக்கலையின் விளைவால் அமிர்த்தம் அருந்தி அதன் விளைவால் தன்னகத்தே தோன்றும் அகத்தீயை ஆராய்ந்து தெளிந்து அதன் மூலம் நூல்களை செய்துள்ளார்கள். அவர்கள் ஆக்கிய நூல்கள்

1. அகத்தியம்
2. உயிர்நிலைக் கலை இலக்கணம்
3. முத்திநெறி இலக்கணம்
4. கரண இலக்கணம்
5. பண்ணிலக்கணச் சூக்கம்
6. இலக்கிய இராமாயணம்
7. இரத்தினச் சுருக்க இராமாயணம்
8. திருஞானசம்பந்தர் கால நிர்ணய விளக்கம்
9. திருமூலரின் சூனிய சம்பாதனை (உரை விளக்கம்)
10. திருமுறைப் பெருநூல் விளக்கம்
11. திருமகள் திருப்பதிகம்
12. கலைஞானம்
13. இலிங்கபுராணம்
14. ஞான சரஸ்வதி பதிகம்
15. வைத்திய சாஸ்திரம்
16. திருஞானசம்பந்தர் திரு அவதாரச் சிறப்பின் விளக்கம்.
17. திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த இரண்டாம் திருமுறை பொருள்விளக்கம். பூர்வ மீமாம்சை. உத்தர மீமாம்சை.

கலியுகத்தில் கருணை கூர்ந்து நம் உயிருக்கு துணையான நூல்களை தந்திருக்கிருர்கள். நம் உயிர்த்தீயை இயக்கி ஒலி மூலம் ஒளியை உண்டாக்க அதன் மூலம் முத்தி அடைய ஆக்கிய நூல்கள். முதற்பொருளாகிய இறைவனுடைய கலையின் மூலம் ஆக்கியதால் இந்நூல்களுக்கு எல்லாம் அகவுரையாகவும் சாட்சியாகவும் அவனே இருப்பதால் கலியின் கொடுமை தீர ஒவ்வொரு நூலாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

அவர்கள் மிகவும் கருணை உள்ளம் கொண்டு முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளியில் முத்தமிழ் வேதத் திருச்சபை நிறுவி பௌர்ணமிதோறும் திருமுறைப் பெருநூல் விளக்கமும் ஞாயிறு தோறும் இலக்கிய இராமாயணத்தையும் இயம்பி செவிக்கு பனிரெண்டு ஆண்டுகள் விருந்து படைத்தருளினுர்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் காட்டியருளிய நெறி வழியே 38 ஆவது ஆண்டு நிறைவை நோக்கி சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது முத்தி தரும் தெய்வ சபையைக் காண்பதற்கு சேரவாரும் செகத்தீரே என அன்போடு தெளிவு குருவின் ஆசியோடு அழைக்கின்றோம்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

## இந்நூலைப் பற்றி....

மராவென்று ரைத்துச் சிவஞான. வாழ்வுற்றமாமுனிய
மராவென்று ரைத்துவாள் நாள் பெற்றராவணன் மாக்கதைய
மரா நின்றசொல்லன்றில் கொல் வேடனை வை வசையதில
மராநின்றகண்டுரை செய்ய ராமாயண மாகியதே (௲)

காலத்திற்கேற்ப நூறு பாடல்களில் இராமாயணத்தை வாசித்து வாழ்வை நெறிப்படுத்தி சிவரகசியத்தை அறிந்து இகபர சுகம் அடைய ஆக்கியது தான் இரத்தினச் சுருக்க இராமாயணமாகிய இந்நூல். மேலும் இராமன் இவ்வுலகத்தில் நமக்கு அற்புதத்தை செய்து காட்டியுள்ளார் என்பதையும் அற்புத இராமாயணம் என்று பெயரிட்டு தந்திருக்கின்றோம். இந்நூலை வாசிக்க வாசிக்கத் தான் தெளிவு பெறமுடியும். ஆகவே சிவபுண்ணிய சீலமெய்யன்பர்கள் நூலை வாசித்து முடிவிலா மோன நிலையை அடைய வாசி பயில இந்நூல் முதற்படியாக அமையும் என்பதை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நல்லோர் திருவடியை நண்ண வைக்கும் இந்நூல்.

"எல்லாக் கலையு மிடைபிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலஞ்
செல்லா வெழுப்பி சிரத்துடன் சேர்தலா
னல்லோர் திருவடி நண்ணி நிற்போரே".

என்பது ஆகமம்

ஒவ்வொரு வீட்டிலும் பூஜை அறையில் வைத்து வணங்கி வாசித்து வாழ்வை வளப்படுத்த வேணுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவண்

முத்தமிழ் வேதத்திருச்சபையார்

முதலாம் பதிப்பு சுபானு ஆண்டு, 2003, மறுபதிப்பு மன்மத ஆண்டு, 2015.

Sri Balaji Graphics, Coimbatore. 9361410269.